




விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 51 குரோதி வருடம் மார்கழி மாதம்
04 ஆம் திகதி வியாழக்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 17 (19.12.2024)









சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனைக் சம்மேளன தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் நேற்று ஜனாதிபதியை சந்தித்தபோது.... நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் இந்த சந்திப்பு இடம் பெற்றது

# வாகன இறக்குமதிக்கு அனுமதி; உழைக்கும் போது செலுத்தும் வரி குறைப்பு

**குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு குறைந்த வரி**

**அஸ்வெசும பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கு ரூ.6000 வவுச்சர்**

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு குறைந்த வரியும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு அதிக வரியும் அறிவிடும் முறைமையை சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி தமது அரசாங்கம் உருவாக்கியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்று மீண்டும் ஏற்பட எமது அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என்றும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் தனியார் பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும்



**2028 இலும் எமது ஆட்சியே..!**

ஜனாதிபதி கூறினார்.நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

08

## கல்விச் சான்றிதழ்களை சபையில் வெளிப்படுத்தினார் சஜித்



( எஸ்.டொரின் )

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வித் தகைமை தொடர்பில் ஆளுங்கட்சி கொறடாவும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ சபையில் கேள்வியெழுப்பியிருந்த பின்னணியில் தமது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்களை சஜித்பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

அரசியல் மேடைகளிலும் சமூக ஊடகங்களிலும் சஜித் பிரேமதாசவின் கல்வித் தகைமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வந்தன.

அவரின் கல்வித் தகைமை தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் நிலவுவதால் லண்டனில் அவர் பெற்ற கல்வித் தகைமைகளை வெளிப்படுத்தினால் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளியை வைக்க முடியும் என ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட (தொடர்ச்சி.)

02

## தமிழக முகாம்களிலுள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் அரசாங்கம் கூடுதல் அக்கறை

**வெளிவிவகார அமைச்சர் புதுடில்லியில் தெரிவிப்பு**

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

தமிழகத்தில் அகதி முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணமாக கடந்த 15ஆம் திகதி இந்தியா சென்றிருந்தார். அவருடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான உயர்மட்ட குழுவொன்றும் (தொடர்ச்சி.)

02



## கெஹெலியவின் வங்கிக் கணக்குகள் முடக்கம்

(கனூஷியா புஷ்பகுமார்)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் நடைமுறை மற்றும் நிலையான வைப்பு கணக்குகள் இரண்டை ஒரு வார காலத்திற்கு இடைநிறுத்துமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. (தொடர்ச்சி.)



02

**சாரதிகள், நடத்துனர்கள் பற்றாக்குறை;**

## 07 டிப்போக்களில் பஸ்கள் முடக்கம்

(எம்.ஏ.அமீனுல்லா )

சாரதிகள், நடத்துனர்கள் பற்றாக் குறை காரணமாக இலங்கை போக்குவரத்துசபையின் (லங்கம) கண்டி பிரதேசத்திற்குட்பட்ட 07 டிப்போக்களில் சுமார் 25 பஸ்கள் சேவையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இ.போ.சபையின் கண்டி பிராந் திய முகாமையாளர் பிரசன்ன தெல்லங்க தெரிவித்துள்ளார் . (தொடர்ச்சி.)

02



## வினாத்தாள் கசிவு தொடர்பில் அறிக்கையிடுமாறு சிஐடிக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு




2024 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் கேள்விகள் கசிந்தமை தொடர்பான விசாரணைகள் சம்பந்தப்பட்ட விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குற்றப் (தொடர்ச்சி.)

02

## நாடாளுமன்ற செயலாளர் மீது குற்றச்சாட்டு

(கனூஷியா புஷ்பகுமார்)

அரசாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலை தொடர்பில் நாடாளுமன்ற இணையத்தளத்திலும், நாடாளுமன்ற செயலாளர் மீதும் குற்றம் சுமத்தப்படுவதாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற ஊழியர்களை இரகசியப் (தொடர்ச்சி.)

02

## நிசாம் காரியப்பர் சத்தியப் பிரமாணம்



ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக மொஹமட் நிசாம் (தொடர்ச்சி.)

02

## ரணிலின் கொள்கைகளையே அநுரவும் பின்பற்றுகிறார்

**இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக மறைக்கிறார்**



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ரணில் ராஜபக்சவின் ஆட்சி நடைபெறுவதாக கடந்த காலத்தில் நாம் விமர்சனங்களை முன்வைத்திருந்தோம். ஆனால், தற்போது ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளை அவ்வாறே பின்பற்றும் ஜனாதிபதி (தொடர்ச்சி.)

02

## மாதாந்த நீர்க்கட்டணம் ரூ.05: அதிர்ச்சி தகவல்

( முகம்மட் முக்தார்)

புகையிரத திணைக்களத்தின் இரத்மலானை கொத்தலாவலபுர விடுதிகளில் உள்ள அதிகாரிகளின் நீர்க் கட்டணமாக ஒருவரிடமிருந்து மாதாந்தம் 05ரூபாய் மட்டும் அறவிடப்பட்டுள்ளதாக (தொடர்ச்சி.)



02

## நிதி பற்றிய குழுவின் தலைவராக ஹர்ஷ



நிதி பற்றிய குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப் பட்டுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்றைய

02

## அக்குறணை நகரில் வெள்ளப்பெருக்கை தடுக்க நிரந்தர வேலை திட்டம் ஆரம்பம்

(எம்.ஏ.அமீனுல்லா)

பலத்த மழையின் போது அக்குறணை வெள்ளத்தில் மூழ்குவதைத் தடுப்பதற்கு நிரந்தர தீர்வை வழங்க கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கண்டி மாவட்ட செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் ஆரம்பகட்ட (தொடர்ச்சி.)

02

## "இலங்கையில் அதானி குழுமத்தின் செயற்பாடுகளில் மாத்திரமே எமது கவனம்"

அதானி குழுமத்தின் ஏனைய நாடுகளுடனான பரிவர்த்தனைகள் தொடர்பில் தமது அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை, மாறாக இலங்கையில் என்ன செய்கிறது என்பதில் மட்டுமே கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளதாக எகனாமிக் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தனது "நிலையான அரசாங்கம்" மேலும் பல இந்திய முதலீடுகளுக்கு "வழி வகுக்கும்" உத்தேசம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். "அவர்கள் (அதானி) மற்ற நாடுகளுடன் எவ்வாறு செயல்படுகிறார்கள (தொடர்ச்சி.)

02



மன்னாரில் நடந்த வடக்கு மாகாண பண்பாட்டு விழாவின் போது..... (படம் கூஞ்சே)

## செருக்குத்தனத்தில் செயற்பட்டால் கோட்டாவின் நிலையே ஏற்படும்



கல்விச் சான்றிதழ்களைபரீட்சித்துப் பார்க்கும் நாடாளுமன்றமாகச் செயற்படாமல், அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்த மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் சபையாகச் செயற்பட வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் (தொடர்ச்சி.)

02

## செருக்குத்தனத்தில்...

அருதிப்பெரும்பான்மையை கொண்டிருக்கும் செருக்குத்தனத்தில் செயற்பட்டால், கோட்டாபயவுக்கு ஏற்பட்ட இழி நிலையே ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (18) உரையாற்றிய அவர் கூறியதாவது,

”எழுபது வருட அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கே, தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தனர். இதை விடுத்து, எம்.பிக்களின் கல்வித்தகைமைகளை பரீட்சித்தல், விவாதித்தல் செயற்பாடுகளே அண்மைக்காலமாக இந்த பத்தாவது நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருகிறது. இந்நிலை நீடித்தால், அரசாங்கம் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடலாம். எனவே, ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுங்கள்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் இருக்கும் நல்ல பண்புகள், தேசிய மக்கள் சக்தி எம்.பிக்களிடமும் இருக்க வேண்டும். 159 எம்.பிக்களை வைத்திருக்கும் செருக்குத்தனத்தில் செயற்பட்டால், கோட்டாபயவுக்கு ஏற்பட்ட இழி நிலையே ஏற்படும். 147 எம்.பிக்களுடன் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் துரத்தியடிக்கப்பட்டது ஏன்? அகம்பாவம் மற்றும் ஆணவத்துடன் நடந்ததால், இன்று மூன்று எம்.பிக்கள் தெரிவாகுமளவுக்கு அவர்கள் இழிவுபடுத்தப்பட்டனர்.

கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் எண்ணிக்கையை அரசாங்கம் கூறியே ஆக வேண்டும். இது தொடர்பில், சுகாதார அமைச்சர் நேற்று வழங்கிய பதிலில் எமக்குத் திருப்தி இல்லை. மக்களால் தெரிவானவர்கள் என்ற உரிமையுடனேயே இவ்விடயத்தைக் கோருகின்றோம். எமது மதத்தை நிந்தித்த கோட்டாவுக்கு இறைவன் வழங்கிய தண்டனையாகவே அவரது ஆட்சிக் கவிழ்ப்பை நோக்குகின்றோம்.

இதுவே எமது நம்பிக்கை. எல்லா மதங்களும் நல்லதையே போதிக்கின்றன. எனவே, சிறுபான்மைச் சமூகங்களை சிறுமைப்படுத்தும் இழி செயலைச் செய்ய வேண்டாம்.

சமூகங்களைப் புறந்தள்ளும் அல்லது ஒரு சமூகத்தை மாத்திரம் குறிவைக்கும் செயற்பாடுகளை எதிர்ப்பதற்கு ஒருபோதும் தயங்கமாட்டோம். மனோ கணேசன், முன்னாள் எம்.பி. சுமந்திரன் ஆகியோருடன் முன்னெடுத்த பணிகளை மீண்டும் செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## நாடாளுமன்ற...

பொலிஸாருக்கு அழைத்து அவர்களை அச்சுறுத்தும் முயற்சி இடம்பெற்று வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“இதற்கெல்லாம் நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளரே காரணம் என்றும் அவர் சதி செய்கிறார் என்றும் நாடாளுமன்ற இணையத்தளத்தை இப்போது குற்றஞ்சாட்டத் தொடங்கியுள்ளனர்.

அவரது கணவர் ஹறிகுப்த ரோஹணதீர கோட்டாபயவின் சட்ட ஆலோசகர் ஆவார்.

அதனால்தான் இவை அனைத்தும் ராஜபக்சவின் சதி என்று கூறப்படுகிறது.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நாடாளுமன்றத்தின் தலைமை அதிகாரியாக தனது பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்றால், அதனைக் கூறுங்கள்.

நாடாளுமன்ற இணையத்தளத்தில் பிரச்சினை என்றால் அதனை நாடாளுமன்ற செயலாளரிடம் கூறுங்கள், ஏன் சி.ஐ.டி.க்கு செல்கிறீர்கள்?

நாடாளுமன்ற ஊழியர்களில் சிலரை சி.ஐ.டி.க்கு வரவழைத்து, சி.ஐ.டியை அரசியல் பொலிஸாக மாற்றி நாடாளுமன்ற ஊழியர்களை பயமுறுத்த முயற்சிக்கின்றனர்.

அதுதான் அடிப்படை நோக்கம்.” எனத் தெரிவித்தார்.

## ரணிலின்...

திசாநாயக்கவிடம் அநுர விக்ரமசிங்க ஆட்சியா நாட்டில் நடைபெறுகிறதென கேள்வியெழுப்புகிறோம் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி இன்று (நேற்று 18) உரையாற்றிய போது அவரது இந்திய பயணம் தொடர்பில் எவ்வித கருத்துகளை முன்வைக்கவில்லை. இது குறித்து கவலையடைகிறோம். ஜனாதிபதியின் முதல் பயணம் இதுவாகும். இந்த பயணம் மற்றும் இதன்போது எட்டப்பட்ட உடன்பாடுகள் தொடர்பில் தெரிந்துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது.

ஜனாதிபதி அநுர மற்றும் இந்திய பிரதமர் மோடி இடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை தொடர்பிலான கூட்டறிக்கை எமக்கு கிடைக்கப்பெற்றது. இந்தியா இலங்கை இடையில் பாலம் அமைப்பது தொடர்பில் நாம் பல்வேறு வகையிலும் சிந்திக்க வேண்டும். எமது சுயாதீனம், கலாசாரம் மற்றும் எமது வேலைவாய்ப்புக்காக பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். டிஜிட்டல் உடன்பாடுகளை இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளும் போது இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் அது இருக்க வேண்டும்.

எரிசக்தி தொடர்பில் ஏற்படுத்தும் உடன்பாடு மிகவும் முக்கியமானது. இந்திய இலங்கை மின்சார இணைப்பு தொடர்பில் இரண்டு தசாப்தங்களாக நாம் பேசுகிறோம். அது தொடர்பில் உரிய பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். இருநாடுகளிலும் மின்சார பற்றாக்குறை ஏற்படும் போது பரிமாற்றிக்கொள்ள வேண்டும். கடல் மார்கமாக இதனை அமைக்கும் போது ஏற்படும் செலவுகள் தொடர்பில் உரிய இணக்கப்பாடுகள் ஏற்பட வேண்டும். இதுதொடர்பில் இந்தியாவுடன் மோதும் நிலை உருவானால் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடம்.

இந்தியா இலங்கைக்கு இடையில் கேபிள் முறையில் உருவாக்கப்படும் இத்திட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் எவ்வாறு தொடர்புபடுகிறது. இதுதொடர்பில் துறைசார் அமைச்சராக ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தியாவுடனான உறவானது ரணில் விக்ரமசிங்க ஏற்படுத்திக்கொண்ட உறவையும் விட மேலானதாக உள்ளது. ரணில் ராஜபக்சவின் ஆட்சி நடைபெறுவதாக கடந்த காலத்தில் நாம் விமர்சனங்களை முன்வைத்திருந்தோம். ஆனால், தற்போது ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளை அவ்வாறே பின்பற்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் அநுர விக்ரமசிங்க ஆட்சி நாட்டில் நடைபெறுகிறதா என கேள்வி கேட்க வேண்டியுள்ளது. அது அவ்வாறு இல்லை என ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## அக்குறணை...

தற்போது இடம்பெற்று வருகின்றன.

முதற்கட்டமாக கண்டி மாவட்ட செயலாளர் இந்திக அனுருத்த பியதாச தலைமையில் நேற்று முன்தினம் (17) அக்குறணை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் ஸ்தல பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அலவத்துகொட பிரதேசத்திலிருந்து அக்குறணை, அம்பதென்ன நகர மையத்திலிருந்து பொல்கொல்ல நீர்த்தேக்கத்திற்கு பாயும் பிக்கா ஓயா தொடர்ந்து நிரம்பி வழிகிறது.

கண்டி மாவட்டச் செயலாளரின் தலைமையிலான இந்தக் குழுவின் ஏனைய அங்கத்துவ நிறுவனங்களாவன, அனர்த்த திட்டமிடல் நிலையம், நகர அபிவிருத்தி அதிகார சபை, அக்குறணை பிரதேச சபை மற்றும் கண்டி மாவட்டத்திற்கு பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் அக்குறணை பிரதேச செயலகம் என்பன இக்குழுவில் இணைந்துள்ளன.

இக்குழு தனது அறிக்கையை எதிர்வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் சமர்ப்பிக்கவுள்ளது.

சம்பந்தப்பட்ட குழு அளிக்கும் அறிக்கையை கருத்தில் கொண்டு, குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் வழங்கக்கூடிய தீர்வுகளை கண்டறிந்து அவற்றை உடனடியாக ஆரம்பிக்க மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அரசுக்கு ஆலோசனைகளை வழங்கும்.

அதற்கமைவாக, கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த தலைமையிலான குழுவினர், அக்குரணை நகரின் வெள்ளப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் அவதானம் செலுத்தினர்.

கண்டி மாவட்ட செயலாளர் அனர்த்த முகாமைத்துவ நிலையம், நகர அபிவிருத்தி அதிகார சபை, அக்குறணை பிரதேச சபை, அக்குறணை பிரதேச செயலகம் உட்பட பல அரச நிறுவனங்கள் அடங்கிய இந்தக் குழு தமது அறிக்கையை சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் கே. டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அலவத்துகொட பிரதேசத்தில் இருந்து அக்குறணை, அம்பதென்ன நகர மையத்திலிருந்து பொல்கொல்ல நீர்த்தேக்கம் வரை பாயும் பிங்கா ஓயா, தொடர்ந்து நிரம்பி வழிவதோடு, வெள்ள நிலையையும் ஏற்படுத்துகிறது.

இதன் காரணமாக அக்குறணை நகரில் உள்ள கட்டிடங்கள் வெள்ளத்தில் மூழ்குவதுடன் கண்டி – யாழ்ப்பாணம் பிரதான வீதியின் போக்குவரத்து அக்குறணை நகரிலிருந்து முற்றாக தடைப்படுகின்ற நிலைமை உருவாகின்றன

கண்காணிப்புச் விஜயத்தின் பின்னர் உரைநிகழ்த்திய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர நகரின் மையப்பகுதியில் நீர் செல்வதற்கு இடையூறாக பல கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளமை தொடர்பில் மாவட்ட செயலாளர் பிரதான குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக குறிப்பிட்டிருந்தாக அவர் தெரிவித்தார்.

## கெஹெலியவின்...

இரண்டு கணக்குகளின் இருப்புத் தொகை சுமார் 200 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் 53 (1) ஆவது பிரிவின்படி நேற்று முன்தினம் (17) முதல் இடைநிறுத்தம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த இடைநீக்க உத்தரவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் மேலும் நீடிக்க ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

கடந்த காலங்களில், இந்த விசாரணைகள் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர், அவரது மனைவி மற்றும் உறவினர்கள் பலரின் சொத்துக்கள் பலவற்றை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்விச்சான்றிதழ்...

ஆளுங்கட்சியின

சில உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வின் போது வேண்டு கோள் விடுத்திருந்தனர்.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நேற்று புதன்கிழமை தமது கல்வித் தகைமைகள் தொடர்பிலான சான்றிதழ்களை சஜித் பிரேமதாச சபையில் முன்வைத்தார்.

தான் சமர்ப்பித்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் உண்மை. இவை போலியானவை என யாராவது நிரூபித்தால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலும் இருந்தும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் ஏன், அரசியலில் இருந்தும் விலகத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நான், எனது பிறப்புச்சான்றிதழையும் எடுத்துவந்தேன். யாராவது கேள்வி கேட்பார்கள் என்று நினைத்துதான் அவ்வாறு எடுத்துவந்தேன் என்றும் தெரிவித்த அவர்,

தனது கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறு தொடர்பாகத் தவறான தகவல்கள் பகிரப்பட்டு வருகிறது. நான் படித்த காலகட்டத்தில் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் F என்ற பெறுபேறு வழங்குவதே நடைமுறையில் இருந்தது. ஆனால் இந்த அடிப்படை அறிவு கூட இல்லாமல் நான் அனைத்து பாடங்களில் W சித்தி வாங்கியுள்ளதாக தகவல்கள் பகிரப்பட்டு வருவதை அவதானித்தேன் என்றார். என்னுடைய கல்வித் தகைமையில் சந்தேகம் இருந்தால் பிரதமரிடம் கேளுங்கள். நான் அவரிடமும் கல்வி பயின்றுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார். மேலும், அவர் லண்டனில் பட்டப்படிப்பை நிறைவுசெய்ததற்கான சான்றிதழையும் அதாவது, சுவரில் மாட்டியிருந்த சான்றிதழையும் அவ்வாறே நாடாளுமன்றத்திற்கு எடுத்து வந்திருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## சாரதிகள்...

கண்டி வடக்கு, கண்டி தெற்கு, வத்தே கம, யட்டிநுவர, தெல்தெனிய, மாத்தளை மற்றும் உடுதும்பர ஆகிய டிப்போக்களில் தற்போது சுமார் 75 சாரதி வெற்றிடங்களும், 33 நடத்துனர் வெற்றிடங்களும் காணப்படுவதாக அவர் கூறினார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அவர் இந்த தகவல்களை வெளிப்படுத்தினார்.

கடந்த அரசாங்கத்தில் இலங்கை போக்குவரத்து சபை கண்டி மாவட்டத்திற்கு 47 புதிய பஸ்களை வழங்கியதுடன் அதில் ஒரு பஸ்ஸிற்கு மாதாந்த குத்தகைத் தொகையாக 165,000 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் இந்த பணம் அனைத்தும் ஏழு டிப்போக்களின் வருமானத்தில் இருந்து வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

எனவே தற்போது இலாபம் ஈட்டாத டிப்போக்கள் மூலம் பஸ்கள் இயக்கப்படுவதாகவும், நஷ்டத்தை இலாபமீட்டும் டிப்போக்கள் மூலம் ஈடு செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## நிஸாம்...

நாடாளுமன்றத்தின் உறுப்பினராக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் நேற்று (18) பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றதுடன், அன்றைய தினம் புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர். அதுவரை ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த நான்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. கடந்த 12 ஆம் திகதி இந்தப் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இதற்கு அமைய அந்த நான்கு உறுப்பினர்களில் அர்ஜுன சுஜீவ சேனசிங்க, முகம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது மற்றும் மனோ கணேசன் ஆகிய மூவர் நேற்று முன்தினம் (17) சத்திய பிரமாணம் செய்து கொண்டனர்.

## வினாத்தாள்...

புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CID) உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விசாரணைகள் தொடர்பான விரிவான அறிக்கையை இன்று (19) காலை 09.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 323,879 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.பரீட்சையின் முதலாம் தாளில் உள்ள சில வினாக்களை ஒத்த வினாக்களுடன் கூடிய பயிற்சிப் பத்திரம் பரீட்சைக்கு முன்னதாக வெளியானதாகவும் அலவ்வ பிரதேசத்தில் உள்ள தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரால் அது விநியோகிக்கப்பட்டதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து பரீட்சைகள் திணைக்களம் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்ததுடன், திணைக்களத்தின் பிரதி ஆணையாளரினால் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.இதனையடுத்து, சி.ஐ.டி.யினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் பின்னர், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் கேள்விகளை பரீட்சைக்கு முன்னதாக கசியவிட்ட குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர். இந்தப்பின்னணியிலேயே உச்ச நீதிமன்றத்தின் இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தமிழக...

சென்றிருந்தது. இந்தப் பயணத்தில் புதுடில்லியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவில் வசிக்கும் இலங்கை அகதிகளின் நிலைமையை தமது அரசாங்கம் பரிசீலனை செய்யும்.1980களில் வன்முறையால் இடம்பெயர்ந்த அகதிகளில் பலர், இந்தியாவில் குடியுரிமை பெறத் தகுதியற்றவர்களாகவும் இலங்கையில் தங்கள் எதிர்காலம் குறித்து நிச்சயமற்றவர்களாகவும் உள்ளனர்.

அவர்களைத் திருப்பி அனுப்புவதற்கான நடைமுறைகள் இருந்தாலும், அவர்கள் அனைவரும் இலங்கைக்குத் திரும்ப விரும்பவில்லை. தகவல்களின்படி, தமிழ்நாட்டில் 104 முகாம்களில் சுமார் 57,000 இடம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் வசிக்கின்றனர், அதே நேரத்தில் சுமார் 34,000 பேர் முகாம்களுக்கு வெளியே மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் குடியேறியுள்ளனர்.” என்றார்.

இதேவேளை,இந்தியா உட்பட 39 நாடுகளின் குடிமக்களுக்கு இலவச விசாக்களை வழங்கும் திட்டம் குறித்த வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் விரைவில் வெளியிட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

“புதிய அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சாதகமான உறவுகளை விரும்புகிறது. ஒரு புதிய அரசாங்கமாக சீனாவுடனும், இந்தியாவுடனும் நல்ல உறவைக் கொண்டிருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். இந்தியாவும் இலங்கையும் பாதுகாப்பு, எரிசக்தி, வர்த்தக உறவுகளை மேம்படுத்த முடிவு செய்துள்ளன.

இலங்கையின் முதல் முன்னுரிமை அதன் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவது, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான அதன் கடன் தொகுப்பை மறுசீரமைப்பது மற்றும் புதிய சுற்றுலா வரவுகளை ஊக்குவிப்பதாகும்.

இலங்கை சுற்றுலாத் துறையில் மூன்று தொடர்ச்சியான பாதிப்புகளை கடந்த காலத்தில் சந்தித்தது. 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், 2020-21 இல் கோவிட் தொற்றுநோய், மற்றும் 2022 இல் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் திருப்பிச் செலுத்தாமை என்பனவே அந்தப் பிரச்சினைகள்.

எமது பொருளாதாரத்தைப் பலப்படுத்த இந்தியா உட்பட 39 நாடுகளின் குடிமக்களுக்கு விசாக்களை இலவசமாக வழங்க உள்ளோம். இதற்கான வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் விரைவில் வெளியிடும்.

## மாதாந்த...

கணக்காய்வு

அறிக்கையில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. அங்குள்ள சுமார் 546 வீடுகளில் வசிக்கும் அதிகாரி களிடம் இவ்வாறு அறவிடப்பட்டு வந்த விடயமே கணக்காய்வு மூலம் அம்பலமாகியுள்ளது.

2021 பெப்ரவரி 6ஆம் திகதி முதல் 2023 டிசெம்பர் 31ஆம் திகதிவரை 9 கோடியே 23 இலட்சத்துக்கு 98 ஆயிரத்து 532 ரூபாய், புகையிரத திணைக்களத்தினால் செலுத்தப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வு திணைக்களத்தால் கண்டறியப்பட்டுள்ளது. இரத்மலானை, கொத்தலாவலபுர புகையிரத திணைக்களத்தில் உள்ள 546 புகையிரத திணைக்கள ஊழியர்களின் வீடுகளுக்கான நீர் கட்டணமாக வருடாந்தம் 30 மில்லியன் ரூபாவிற்கு மேல் புகையிரத திணைக்களம் செலுத்துவதாக கணக்காய்வு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீடுகளில் தண்ணீர் மீற்றர்களை முறையாக பொருத்தி செலவுகளை நிர்வகிக்க வேண்டும் எனவும் இவ்வாறான மோசடிகள் மூலம் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக குடியிருப்பாளர்களிடமிருந்து தனிப்பட்ட அறிக்கைகளைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, 546 அடுக்குமாடி குடியிருப்புகளில் 509 குடியிருப்புகளுக்கு பழைய நீர்மானிகளுக்கு பதிலாக புதிய நீர்மானிகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் ரயில்வே துறை உள்ளக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## அரசாங்க...

நாடாளுமன்ற அமர்வின் போது இதனை அறிவித்தார்.

இதேவேளை, அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர்களின் பெயர்களையும் சபாநாயகர் அறிவித்தார். ஹர்ஷன சூரியப்பெரும, ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரகோன் மற்றும் சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டனர்.

# ஜனாதிபதி அநுர சீனாவிற்கு நன்றி தெரிவிப்பு

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கைக்கு கடன் பெற்றுக்கொடுத்தமைக்காக சீன அரசாங்கத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனைக் சம்மேளன தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் (Qin Boyong) ஆகியோருக்கு இடையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று (18) நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்தி,



புதிய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் கின் பொயோங் தெரிவித்தார். அதேபோல் நாட்டின் அனர்த்த நிலைமைகளின் போது உதவிகளை வழங்கியமை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கியமைக்காகவும் நன்றி கூறிய ஜனாதிபதி சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார். இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் மத்திய அதிவேக வீதியில் சீனாவிற்கு பொறுப்பான பகுதிகளை நிறைவு செய்ய வேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை மையப்படுத்தி விநியோக மத்தியநிலையம் மற்றும் நிறுவன வேலைத்திட்டங்களை விரைவாக ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். குறித்த வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவும், பல்வேறு காரணங்களுக்காக இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் சமுத்திர ஆய்வு பணிகளை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக இதன்போது உப தலைவர் கூறினார். அத்தோடு, ஹம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தை அண்மித்து சீன நிறுவனங்களை அமைத்து உலக அளவில் இலங்கைக்கு மிகச் சிறந்ததொரு பிரவேசத்தை ஏற்படுத்தித் கொடுக்க எதிர்பார்த்திருப்பதுடன்,எதிர்வரும் காலங்களில் சீனாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கும் ஜனாதிபதியை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 04ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** இன்று அதிக முயற்சி எடுத்து பலன் பெறும் நாள்.

**ரிஷபம்** உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். சுய வளர்ச்சி உங்களுக்கு வழி காட்டும்.

**மிதுனம்** இன்று சாதகமான நாள் அல்ல. மன உளைச்சலை சமாளிக்க அமைதியாக இருக்க வேண்டும்.

**கடகம்** இன்று அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

**சிம்மம்** உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்க வேண்டும் எனில் உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை.

**கன்னி** இன்றைய நாள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

**துலாம்** இன்றைய நாள் பயனுள்ளதாக அமையும். முறையான திட்டமிடல் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம்.

**விருச்சிகம்** இன்று சவால்கள் மிகுந்த நாள். எனவே எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**தனுசு** இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக காணப்படாது.

**மகரம்** இன்று உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். விருப்பங்கள் நிறைவேறும் நாள்.

**கும்பம்** முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாள் உகந்த நாள்.

**மீனம்** இன்று நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 01:10 வரை சதுர்த்தி பின்பு பஞ்சமி.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 04:09 பூசம் பின்பு ஆயில்யம்.
**யோகம்:** சித்த அமிர்த.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** மூலம்
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**குளிகை:** 09:00 AM முதல் 10:30 PM வரை.
**எமகண்டம்:** 06:00 AM முதல் 07:30 AM வரை.

# அடையாள அட்டை இல்லாதவர்களும் அஸ்வெசும உதவித்தொகையை பெறலாம்

### பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



அஸ்வெசும உதவித்தொகையை பெறத் தகுதி பெற்றும் இதுவரையும் வங்கியில் வைப்பிலிடப்பட்ட கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு இலகுவாக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வழிகாட்டலுடன் மக்களுக்கு மேலும் நலன் சேர்க்கும் வகையில் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட அஸ்வெசும நலத்திட்ட பயனை அடைந்து கொள்ள முடியும்.இதில் அடையாள அட்டை இல்லாத காரணத்தால் பணத்தினை பெற்றுக் கொள்வதில் குறிப்பாக எமது மலையக மக்கள் பல்வேறு தடங்கல்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளார்கள்.

இக்கொடுப் பனவுகளை வங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான உங்கள் பிரதேச கிராம உத்தியோகஸ்தர் ஊடாக தற்காலிக அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தடையின்றி அஸ்வெசும உதவித்தொகையை பெற்றுக் கொள்ள முடியும் என இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்மைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

### ரணிலுக்கு வாழ்த்து தெரிவிக்க

# அரசாங்க பஸ்ஸை எடுத்துச்சென்ற இ.போ.ச முகாமையாளர் இடைநிறுத்தம்



கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக கடமை நேரத்தில் இ.போ.ச பஸ்ஸை எடுத்துச்சென்ற டிப்போ முகாமையாளர் உட்பட ஆறு பேர் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக களுத்துறை மாவட்ட இ.போ.ச பிரதேச டிப்போ தெரிவித்துள்ளது.

ஹொரணை டிப்போ முகாமையாளர், உதவி முகாமையாளர் (கட்டுப்பாடு) மற்றும் நான்கு ஊழியர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேட்புமனு கையளிக்கும் தினத்தன்று அவருக்கு வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவிக்கும் முகமாக இவர்கள் சென்றதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ஆறு பேரும் கடமை நேரத்தில் பொரளைக்கு NB 6182 இலக்கம் கொண்ட ஹொரண டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸை எடுத்துக்கொண்டு பயணித்ததாகக் கூறப்படுகின்றது.

இ.போ.ச அதிகாரிகள் இருவர் மற்றும் நான்கு ஊழியர்களும் இ.போ.ச பஸ்ஸில் பொரளைக்கு சென்றதாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே அவர்கள் 6 பேரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.





இந்தியாவிற்கான இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்றுமுன்தினம் (17) நாட்டை வந்தடைந்தார். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பயணிகள் மற்றும் விமான நிலைய ஊழியர்களுடன் சுமுகமாக உரையாடிய ஜனாதிபதி, அவர்களுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டார்.



# முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைக்கப்படுவது அவசியம்

### நாடாளுமன்றில் ரவிகரன் எம்.பி வலியுறுத்து

**(முல்லைத்தீவு நிருபர்)**

முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் பேரவலத்தின் சாட்சியாக, நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் (17) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024 நவம்பர் 27 நாளில் எமது மக்கள் தங்களின் உறவுகளுக்கு எதுவித இடர்பாடுமின்றி, அமைதியாக தமது அஞ்சலிகளைச் செலுத்தி தமது உணர்வலைகளை வெளிப்படுத்தி ஆறுதலடைந்தனர். அந்தவகையில் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைத்தீவில் காலங்காலமாக தொடர் இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழர்கள், 2009இல் இடம்பெற்ற இறுதிப்போரில் வார்த்தைகளில் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவித்து இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டனர். இறுதிப்போரின் வலிகள் இன்னும் ஆறாத நிலையில் அப்போரில் தமது உறவுகளை இழந்த ஏராளமான மக்கள் இன்னும் தம் உணர்வுகளுடன் நடைபிணங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தம்மை யாராவது காப்பாற்றமாட்டார்களா? என்ற ஏக்கத்தில் சின்னஞ்சிறியவர்கள் முதல், பெரியவர்கள்வரை ஏங்கித்தவித்த நிலை, "பசி, பசி" எனக் குழந்தைகள் அழும்போது செய்வதறியாத நிலையில் பெற்றோர்கள் கலங்கிய அவலநிலை, பதுங்குகுழிகளைவிட்டு வெளியேவந்தால் தப்பமுடியாது என்றெண்ணி பதுங்குகுழிகளுக்குள்ளேயே தங்கியிருந்த நேரம் அதற்குள்ளேயும் குண்டுகள் விழுந்து உறவுகள் மடிந்தபோது உயிரிழந்த தமது உறவுகளைப் புதைப்பதற்கு இயலாமல் உடலங்களை அவ்வாறே விட்டு ஓடிய நிலமைகள் ஆகியவற்றை எண்ணிப்பாருங்கள். இலட்சக்கணக்கில் தமிழ் உறவுகளைப்பலிகொண்ட அந்தப் பேரவலம், தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மன உளவியலில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இந்தநிலையில் அங்கு உறவுகளை இழந்து, தற்போது வாழ்ந்துவருகின்ற மக்கள் தம் உறவுகளை நினைவுகூர்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை என்பதை அங்குள்ள மக்கள் ஆதங்கத்துடன் கூறிவருகின்றனர். படுகொலைசெய்யப்பட்ட எம் உறவுகளை நினைவுகூர ஒரு நினைவாலயம் அமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

அந்தவகையில் தேசிய பேரவலத்தின் சாட்சியாக நினைவு ஆலயம் முள்ளிவாய்க்காலில் மே -18 நினைவுகூருமிடத்தில் அமைக்கப்படவேண்டும்.

இனப்பாகுபாடு பாராது, நாம் முள்ளிவாய்க்காலில் ஓர் நினைவாலயம் அமைப்பதற்கு அனுமதிதாருங்கள் எனக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

# குற்றச்சாட்டை நிரூபித்தால் பதவி விலகுவேன்

### நாமல் சவால்



சட்டக்கல்லூரி பரீட்சையில் நான் குளிரூட்டப்பட்ட தனி அறையில் பரீட்சை எழுதினேன் என்று யாராவது நிரூபித்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பேன். ஆனால் அதனை நிரூபிக்க முடியாவிட்டால் அமைச்சர் வசந்த சமரசிங்க பதவிவிலகுவாரா? என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சவால் விடுத்துள்ளார்.

நாமல் ராஜபக்ச சட்டக்கல்லூரி பரீட்சைக்கு தனி அறையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டார் என்று கூறி அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று முன்தினம் சபையில் தெரிவித்திருந்தார். அதற்கு நேற்று பதிலளித்த நாமல் ராஜபக்ச கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டக்கல்லூரி பரீட்சைக்கு நான் தனியாக தோற்றினேன், அல்லது எனக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன என்று யாராவது நிரூபித்தால் நான் எம்பி பதவியை துறப்பேன். ஆனால் அதனை நிரூபிக்கத் தவறினால் இக்குற்றச்சாட்டை முன்வைத்த அமைச்சர் வசந்த சமரசிங்க தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க வேண்டும். இந்த சவாலை ஏற்கத் தயாரா? அரசாங்கம் முன்னர் கூறியவற்றை செய்யமுடியாமல் இப்போது வேறு விடயங்களை செய்ய முயல்கிறது. சொன்னது ஒன்று செய்வது இன்னொன்று என்று குறிப்பிட்டார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு

இலங்கை பத்திரிகையாளர் சங்கம் 69ஆண்டு விழாவும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் 10 பேரைக் கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் குருலு காரியகரவனா தலைமையில் இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஊடக தகவல் துறை பிரதியமைச்சர் ஹன்சக்க விஜயமுனி கலந்து கொண்டார். இதன்போது





சிரேஷ்ட ஊடகவியலாளர்களான தயா லங்காபுர, என்.எம் அமீன், வி.தனபாலசிங்கம் திருமதி சீலா விக்கிரமரமசிங்க, பி.பி. இலங்கசிங்க, ஸ்டான்லி சமரசிங்க, எஸ்.எஸ். செல்வநாயகம், துசித்த மல்லசேகர, அலேக்சாந்திர பாலசூரிய, ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# ஓய்வு நிலை ஜனாதிபதிகளுக்கு ஏன் இந்த சிறப்பு உரிமை....?

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட முப்படைகளையும் அடுத்த வாரத்தில் இருந்து குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நீண்ட விளக்கம் ஒன்றை தெரிவித்த அவர், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் பிரகாரம் பாதுகாப்பு வழங்கப்படுமென குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதிகளின் சார்பில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்களையும் அமைச்சர் வெளிப்படுத்தினார்.

தேவைக்கு மேலதிகமான பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். இதற்காக, பொது மக்களின் வரிப்பணம் வீண் விரயம் செய்யப்படுவதாக அமைச்சர் மக்கள் சபையிலே தெளிவுபடுத்தி இருக்கிறார்.

நாட்டுக்காக உழைத்து - அரும்பணி ஆற்றி இளைப்பாறி இருப்பவர்களே, இந்த முன்னாள் ஜனாதிபதிகள். இவர்களது ஓய்வுக் காலங்கள் கண்ணியமாகவும் சிறப்பாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும். இதனை செவ்வனே நெறிமுறைப்படுத்த நாடு கடமைப்பட்டிருக்கிறது.

நமக்காக உழைத்த பெருமக்களை முறையாக பராமரித்து கண்ணியம் காக்கும் கடமை நமக்கு நிறையவே இருக்கிறது. இதில் மாற்று கருத்து இருப்பதற்கு வாய்ப்பே இல்லை.

ஒரு மனிதன் வாழ்வதற்கான அடிப்படை தேவைகளோடு, பாதுகாப்பும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அத்தியாவசிய தேவைகளில் ஒன்று. ஆனால் இங்கே தான் பிரச்சினையே உருவெடுத்திருக்கிறது.

இளைப்பாறி ஓய்வு நிலையிலேயே இருக்கின்ற ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு, தேவையான பாதுகாப்பு ஊழியர்களைவிடவும் மேலதிகமானோர் பணிக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கையில்தான், ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற இந்த அரசாங்கம் துரித பணியில் இறங்கி இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பி வருகின்றன. இந்த எண்ணிக்கை குறைப்பு, அவர்களுக்கு பாரிய உயிர் அச்சுறுத்தலாக இருக்கிறது என்று ஆவேச குரல் எழுப்புகிறார்கள். இப்போதைய நாடாளுமன்றத்தினுள் முன்னைய ஆட்சிகளின் எச்ச சொச்சங்களாக இருப்பவர்களின் சிறப்புரிமை பேச்சுகளாகவும் இதனை பார்க்க முடியும்.

ஆனால், உண்மை நிலை இவர்களுக்கு புரியாதது அல்ல.

ஜனாதிபதிகளின் பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதற்கான விளக்கத்தை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், விலாவாரியாக நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொன்னார்.

1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு, ஓய்வு பெறும் ஜனாதிபதிகளுக்கு இந்த சிறப்பு உரிமைகளை வழங்கி இருந்தாலும், அவை துஷ்பிரயோகம் செய்யப்பட்டே வந்திருக்கின்றன என்பது வரலாற்றுப் பாடமாகத் தெரிகிறது.

கடந்த பதினொன்றரை மாத காலப் பகுதியில், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக, 1448 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட்டதாக அமைச்சர் கூறுகிறார்.

இதன்படி, "முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு, ஆயுதப்படை, பொலிஸ் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் என்பன பாதுகாப்பு வழங்கியுள்ளன. அவருக்காக கடந்த பதினொன்றரை மாதங்களில் மாத்திரம் ஆயுதப் படைகளுக்கு 328 மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் 327 மில்லியன் ரூபாவையும் செலவிட்டுள்ளன. ஜனாதிபதி செயலகம் சார்பில் 55 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன்படி, ஓய்வு நிலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு 710 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு 207 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆயுதப் படை சார்பில் ஆறு மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் சார்பில் 185 மில்லியன் ரூபாவும், ஜனாதிபதி செயலகத்தினால் 16 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்காக ஆயுதப்படையினர் 258 மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் 39 மில்லியன் ரூபாவும், ஜனாதிபதி செயலகம் 10 மில்லியன் ரூபாவும் என மொத்தம் 307 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது

இதேபோல், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முப்படையினர் சார்பில் 19 மில்லியன் ரூபாவும், பொலிஸ் திணைக்களம் 60 மில்லியன் ரூபாவும், ஜனாதிபதி செயலகத்தில் இருந்து மூன்று மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 82 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்றிருக்கும் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக இவ்வளவு தொகை பணத்தை செலவிடுவது என்பது, பெரும் வேதனைக்குரியது. முன்னாள் ஜனாதிபதி ஒருவர் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதால், பாதுகாப்பு இருக்கும் என்று நினைக்கின்றாரா.? அல்லது சமூக அந்தஸ்தாக நினைக்கின்றார்களா. என்பது புரியவில்லை.

மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு அதிகாரிகள் சிலர், அவர்களது விவசாயப்பண்ணைகளில் வேலை செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள். இன்னும் சிலரை, தோட்ட வேலைகளுக்கு பயன்படுத்துகிறார்கள் என்று, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டினார்.

மஹிந்தவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டவர்களில், மேலதிகமாக உள்ளோரையே பண்ணை வேலைகளுக்கு பயன் படுத்துகிறார்கள் என்பது அரசாங்கத்தின் கணிப்பு.

எனவே, ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களை விட, மேலதிகமாக இருப்போரையே விலக்கிக் கொள்வதாக அரசாங்கம் தெளிவுபடுத்துகிறது. இதனைத் தான் எதிரணியினர், பாதுகாப்பு குறைப்பு என்று கோஷம் எழுப்புகிறார்கள்.



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் : அரை நூற்றாண்டு சாதனைகளும் சமூக பங்களிப்பும்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வட இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கிய புள்ளியாக திகழ்கிறது. 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம், தமிழ் சமூகத்தின் கல்வியியலுக்கான எதிர்காலத்தை வடிவமைக்க முக்கியமான தூணாக விளங்கியுள்ளது. இது இன்று 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், அதன் கல்விச் சாதனைகள், ஆராய்ச்சிக் கொடுப்பினைகள், சமூக சேவைகள் மற்றும் எதிர்கால இலக்குகள் குறித்து விரிவாக ஆராய்வது முக்கியமானது.

### ஒரு குறிக்கோள், பல பாதைகள்

யாழ் பல்கலைக்கழகம் உருவாகியது ஒரு சமூகத்தின் கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சியின் அவசியத்தை உணர்ந்து. 1970களில் நாட்டின் வட பகுதியில் உயர்கல்வி வாய்ப்புகள் குறைவாக இருந்தன. தமிழ் மக்களின் அறிவியல் கல்விக்கான உரிமையை உறுதி செய்ய, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் உருவாக்கியது. இது தமிழ் மக்களின் கல்வி விழிப்புணர்ச்சிக்கான மிக முக்கியமான நடவடிக்கையாக அமைந்தது. ஆரம்பத்தில் மூன்று பீடங்களுடன் தொடங்கிய பல்கலைக்கழகம், தனது கல்விக் கொள்கை மற்றும் பன்முகத்தன்மையால் இன்று பல்வேறு துறைமுகங்களில் விரிந்துள்ளது.

### 1. கல்வி திறன்கள் மற்றும் ஆராய்ச்சி முன்னேற்றங்கள்

கல்வியின் உன்னதமான தரத்தை மேம்படுத்துவதற்காக யாழ் பல்கலைக்கழகம் தனித்துவமான பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தியது. தமிழ் மொழியியல், சோசலாஜி, கணிதவியல் மற்றும் இயற்கை அறிவியல்களில் பல முக்கியமான கண்டுபிடிப்புகள் இங்கே உருவாக்கப்பட்டன. மேலும், மருத்துவமனை மையம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் நடந்த ஆராய்ச்சிகள், மாணவர்களை உலகளாவிய சந்தைகளில் போட்டியாளர்களாக உருவாக்கின. பல்கலைக்கழகம் தற்போது தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் கூட்டாகவும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

### 2. சமூக சேவைகள்

யாழ் பல்கலைக்கழகத்தின் முக்கிய பங்களிப்புகளில் ஒன்று அதன் சமூக சேவைகள் ஆகும். பல்கலைக்கழகம் வழக்கமாக கிராமப்புற மக்களுக்கு உடல்நலம் தொடர்பான முகாம்கள், கல்வி பயிற்சிகள் மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது. தனி நபர்கள் மற்றும் சமுதாய நலன்களுக்கான சமூக ஆராய்ச்சி மையங்கள், வறுமையிலிருந்து மேலே எழுவதற்கான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றன.

### 3. மாணவர்களின் சாதனைகள்

50 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் இருந்து பட்டம் பெற்ற மாணவர்கள், உலகின் பல உயர்நிலை பணிகளில் தங்கள் கையெழுத்தை பதித்து வருகின்றனர். இவ்வகையில் யாழ் பல்கலை தமிழ் மக்கள் சமூகத்தின் அறிஞர் உருவாக்கம் மற்றும் சிந்தனை வளர்ச்சிக்கான மையமாக திகழ்கிறது.

### 4. கலை மற்றும் கலாசாரம்

தமிழர் மரபின் கலை மற்றும் கலாசார வளர்ச்சிக்கான மையமாகவும் இது பெருமை பெற்றுள்ளது. தாதரிணி நிகழ்ச்சிகள், நாட்டிய மற்றும் இசை அரங்குகள், மற்றும் ஆய்வுகள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இப்பல்கலைக்கழகத்தை ஒரு முக்கிய இடமாக ஆக்கியுள்ளது.

50 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்த இப்பல்கலைக்கழகத்தின் எதிர்கால நோக்கங்கள் மிகவும் துரிதமாகவும் உறுதியானவையும் இருக்கின்றன:

1. சர்வதேச ஒத்துழைப்பு
   சர்வதேச பல்கலைகளுடன் கூட்டாக ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது, புதிய தொழில்நுட்பங்களை கற்றல் மற்றும் விரிவாக்க திட்டங்களை செயல்படுத்தல்.
2. கற்றல் முறைகளின் நவீனமயம்
   இணைய வழிக் கற்றல், தொலைநோக்குக் கல்வி, மற்றும் உலகளாவிய சமயங்களில் பொருந்தும் வகையில் புதிய பாடத்திட்டங்களை வடிவமைத்தல்.
3. சமூக சேவைகள் அதிகரிப்பு
   நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் வறுமை நிவாரணத் திட்டங்களை மேலும் விரிவாக்கி, சமூக மேம்பாட்டிற்கு உறுதுணையாக விளங்குதல்.
4. பாதுகாப்பும் சமாதானமும்
   யுத்தக்காலத்தை கடந்து மீண்டும் உருவாகி வரும் சமூகத்தில் கல்வி அமைதி மற்றும் மனிதவாழ்வுக்கான ஒரு சுரங்கமாகத் திகழ்வது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தனது 50 ஆண்டு பயணத்தில் பல முன்னேற்றங்களை அடைந்தாலும், தொடர்ந்து எதிர்கால சவால்களை எதிர்கொள்ள வேண்டும். பல்கலைக்கழக வளங்கள் மற்றும் பணியாளர்களின் திறனை மேம்படுத்தல், மாணவர் சமூகத்தின் தேவைகளைப் போதிக்கும் வகையில் இன சமாதானத்தின் பாலமாக திகழ்தல் என்பவை இன்றைய தேவை. எனினும், கல்வி, ஆராய்ச்சி, மற்றும் சமூகத்தின் பொறுப்பு என மூன்றிலும் சிறந்து விளங்கும் இக்கல்வியகம், அரை நூற்றாண்டு காலத்தில் தமிழ் சமூகத்தின் அடையாளமாக விளங்குகிறது.

**வர்ஷனா வரதராசா**
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# அரேபிய தீபகற்பத்தில் வாழ்ந்த பழங்குடி சிறுபான்மை மொழி

## உலக அரபு மொழித் தினம் 18.12.2024

اليوم العالمي للغة العربية
WORLD ARABIC LANGUAGE DAY

அரபு மொழி என்பது செமித்திய மொழிக் குடும்பத்தின் பிரதானமான மொழிகளில் ஒன்றாகும். இது கி.பி. 06 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிகளில் அரேபிய தீபகற்பத்தில் வாழ்ந்த நாடோடி பழங்குடி மக்களால் பேசப்பட்ட ஒரு சிறுபான்மை மொழியாகும். இன்று மிகக் கூடுதலாக பேசப்படும் செமித்திக் மொழி அரபு மொழியாகும் .

இந்த மொழி 26 நாடுகளில் ஆட்சி மொழியாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரப்பூர்வ மொழிகளுள் ஒன்றாகவும் 310 மில்லியன் (31 கோடி) மக்களின் தாய்மொழியாகவும் அரபு மொழி அமைந்துள்ளது.

இறுதி நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நபித்துவத்துடன் மத்திய கிழக்கு மக்களின் பேச்சு மொழியாகக் காணப்பட்ட அரபு மொழியானது காலப்போக்கில் சர்வதேச மொழியாக செல்வாக்குப் பெற்றது.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் ஆகியன அம்மொழியில் அமைந்தமை அதன் அந்தஸ்தை சர்வதேச மட்டத்தில் பறைசாற்றியதுடன், அது சொற்செறிவும் பொருள் வளமும் கொண்ட செழுமைமிக்க ஒரு செம்மொழியாகும்.

அல்லாஹு தஆலா அல்-குர்ஆனில் அரபு மொழி பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

"நீங்கள் விளங்கிக்கொள்வதற்காக அரபு மொழியிலான குர்ஆனாக நாமே இறக்கி வைத்தோம்". (ஸூறா யூஸுப் : 03)

"அல்-குர்ஆன் அரபு மொழியில் அருளப்பெற்றதற்கான காரணம், அது எல்லா மொழிகளிலும் தெளிவானதும் விசாலமானதுமான செம்மொழியாகும். சொல்லில் தெளிவும் கருத்தில் செறிவுமிக்க மொழியாகும். மனதில் நிற்கும் பொருளை வெளிப்படுத்துவதில் முதற்தரமான மொழியாகும் என்பதனாலாகும்." (தஃப்ஸீர் இப்னு கஸீர்)

அறிவுக் கலாசாரத்தை ஊக்குவிப்பதிலும் அறிவியலையும் தத்துவ சித்தாந்தங்களையும் முழு உலகிற்கும் பரவச்செய்வதிலும் அரபு மொழியின் பங்கு காத்திரமானது. அதே போன்று உலகெங்கிலுமுள்ள சமூகப் பரம்பல்களுக்கு மத்தியில் ஒரு கலாசார இணைப்பொன்றையும் அது ஏற்படுத்தியது.

வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி, அரபு மொழிக்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்பானது, இறுதி நபித்துவத்துக்கு முற்பட்ட பண்டைய அரேபிய வர்த்தகர்கள் இலங்கையுடன் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்த நாளிலிருந்து இருந்து வந்துள்ளதாக வரலாறு குறிப்பிடுகிறது.

19 ஆவது நூற்றாண்டில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்று அனைவராலும் அழைக்கப்படும் அல்லாமா ஸெய்யித் முஹம்மத் லெப்பை ஆலிம் (ரஹ்) அவர்களின் தலைமையில் அரபு மொழியிலான இஸ்லாமிய சமயக் கல்விப் போதனைகள் மத்ரஸாக்கள் மட்டத்தில் துவக்கிவைக்கப்பட்டன.

வருடாந்தம் டிசம்பர் 18 ஆம் திகதி அரபு மொழித் தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகளான ஆறு மொழிகளில் அரபு மொழியும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக முஸ்லிம்கள் அல்-குர்ஆனையும் அல்-ஹதீஸையும் புரிந்துகொள்வதற்கும் தொழுகைகளை உயிரோட்டமாக அமைத்துக் கொள்வதற்கும் அன்றாட திக்ர், அவ்ராதுகள், சந்தர்ப்ப துஆக்களை பொருளுணர்ந்து ஓதுவதற்கும் அரபு மொழியைக் கற்றுக்கொள்வது இன்றியமையாதது.




இலங்கை முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் அரபு மொழியைக் கற்றுக்கொள்வதற்கு முனைவதனூடாக நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்ய முடியும்.

மேலும் இஸ்லாத்தின் விழுமியங்கள் மற்றும் போதனைகளை அதன் மூலமொழியிலிருந்து நேரடியாக விளங்கிக் கொள்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பாக அமையும்.

சர்வதேச அரபு மொழிக்கான தினமான இந்நாளை நினைவுகூரும் அதேவேளை மொழி, மத, கலாச்சார பன்முகத்தன்மையை மதித்து செயல்படுவதனூடாக மானுடத்துக்குப் பங்காற்றுவோமாக!

**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை**

# இலங்கைக்குக் கடத்தவிருந்த 450 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல்



இலங்கைக்குக் கடல் வழியாகக் கடத்துவதற்காக இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை அடுத்த வேதாளை தெற்கு தெருவில் உள்ள வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்திய மதிப்பில் 50 இலட்சம் மதிப்பிலான 450 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் நேற்று முன்தினம் அதிகாலை மாவட்ட காவல்துறை தனிப்பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்து கடல் அட்டைகள் அடங்கிய மூட்டைகளை மண்டபம் வனத்துறை அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், மண்டபம் வேதாளை, மரைக்காயர் பட்டினம், களிமண்குண்டு, குந்துகால் உள்ளிட்ட கடல் பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்குக் கடல் அட்டை, சமையல் மஞ்சள், பீடி இலை பண்டல்கள் மற்றும் கஞ்சா, மெத்தபெட்டமைன் போன்ற போதைப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்கள் கடல் வழியாக நாட்டுப் படகில் கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று முன் தினம் அதிகாலை இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிப்பிரிவு பொலிஸாருக்கு மண்டபம் அடுத்த வேதாளை தெற்கு தெருவில் உள்ள வீட்டில் இலங்கைக்குக் கடல் வழியாகக் கடத்துவதற்காகத் தடை செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பதுக்கி வைத்திருப்பதாகக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தனிப்பிரிவு பொலிஸார் குறித்த வீட்டைச் சுற்றி வளைத்தனர்.

ஆனால் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் வீட்டின் பின் புறம் சாக்கு மூடைகளில் பதப்படுத் தப்பட்ட சுமார் 450 கிலோ கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட் டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து கடல் அட்டைக ளைப் பறிமுதல் செய்த தனிப் பிரிவு பொலிஸார் வீட்டின் உரிமையாளர் மீது வழக்குப் பதிவு செய்து அவரைத் தேடி வருகின்றனர்.

# ஒன்லைன் மூலம் 77 நாடுகளில் உள்ளோருக்கு பிறப்பு சான்றிதழ்

## பதிவாளர் நாயகம் தெரிவிப்பு

77 நாடுகளில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கு ஒன் லைன் மூலம் பிறப்பு சான்றி தழை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு பதிவாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு அமைச்சுடன் இணைந்து இலங்கைக்கு வெளியே 77 நாடுகளில் வசிக்கின்றவர்கள் தங்களுடைய பிறப்புச் சான்றிதழ் களை ஒன்லைன் மூலம் பெற முடியும்.

நாங்கள் இரு வாரங்களுக்கு முன்பாக 7 நாடுகளோடு இணைந்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம் அது சாத்தியமாக அமைந்துள்ளது. வெளிநாட்டில் இருப்பவர்களும் எங்களுடைய பிரஜைகள் என்ற அடிப்படையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அடையாள அட்டை எம்மை அடையாளப்படுத்துவதற்கு மூல ஆவணமாக இருந்தாலும்



அதனை வழங்குவதற்குப் பிரதான சான்றாகப் பிறப்பு சான்றிதழ் காணப்படுகின்றன.

இதன் மூலம் நாட்டில் உள்ள அனைத்து ஆவணங்களும் ஒன்றிணைக்கப்படுகிறது என்றார்.

# இளைஞனின் சடலம் மீட்பு

▪ பு.கஜிந்தன்

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இணுவில் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செட்டி வீதி, இணுவில் மேற்கு இணுவில் பகுதியைச் சேர்ந்த அமுதலிங்கம் நிவேதன் (வயது 31) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சுன்னாகம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் கல்வி நிறுவனங்களின் வசதிகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தவும்

## யாழ்.அரசாங்க அதிபர் வேண்டுகோள்



▪ பு.கஜிந்தன்

பிள்ளைகளின் நலன் கருதி தனியார் கல்வி நிறுவனங்களின் அமைவிடங்கள், வகுப்பறைக் கட்டமைப்பு மற்றும் வசதிகள் தொடர்பில் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் கூடுதலான கவனம் செலுத்துமாறு அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கேட்டுக் கொண்டார்.

தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் (17) யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமையுரைபற்றிய அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது,

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவும், மாவட்டச் செயலகத்தில் 2024.12.11 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவும், தரம் 6 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புக்களுக்கான தனியார் கல்வி நிலைய மற்றும் குழு வகுப்புச் செயற்பாடுகளை மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காகவும், அறநெறிசார் செயற்பாடுகளுக்காகவும், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்துவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத் தீர்மானமானது மாவட்டத்தின் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**மேற்படி கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.**

1. தரம் 6 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புக்களுக்கான தனியார் கல்வி செயற்பாடுகள் மற்றும் குழு வகுப்புக்களை வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்துவது எனவும். பிரதேச செயலாளர்கள் தமது உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்படி விடயத்தினை கண்காணித்து அறிக்கையிடுதல் வேண்டும் எனவும் தீர்மானிக் கப்பட்டது.

2.தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோர்கள் காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் - நிர்வாகிகள் இதற்கான சரியான பொறிமுறையினை மேற்கொண்டு போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும், இந்த பொறிமுறையினை தாமாக நடைமுறைப்படுத்த தவறும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் பொலிசாரின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. பிரதேச செயலாளர்கள் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் தமது பிரதேசங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புக்களைத் தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# இலங்கை தமிழரசு கட்சியின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா





▪ பு.கஜிந்தன்

இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 75 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலைக்கு இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்களால் மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் முக்கியஸ் தர்களான மாவை சேனாதிராஜா, சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இலங்கை தமிழரசுக் கட்சி 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி கொழும்பு மருதானை எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் வைத்து தந்தை செல்வாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அதிசொகுசு பஸ் - லேண்ட் மாஸ்டர் விபத்து ஐவர் படுகாயம்






▪ பு.கஜிந்தன்

கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றி வந்த அதிசொகுசு பஸ் ஒன்று, லேண்ட் மாஸ்டர் வாகனத்தை மோதித்தள்ளியதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (18) காலை ஏ-9 வீதி, மிருசுவில் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# வானிலை எச்சரிக்கையை மீறிச் சென்ற படகு விபத்து



▪ பு.கஜிந்தன்

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியிலிருந்து நேற்று முன்தினம் (17) அதிகாலை மீன்பிடிக்கச் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளானது.

வானிலை மாற்றம் காரணமாக 19ஆம் திகதிவரை மீனவர்கள் கடலுக்கு செல்லவேண்டாமென எச்சரிக்கப்பட்டிருந்த நிலையில், எச்சரிக்கையை மீறி மீன்பிடிக்க சென்ற படகே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

படகில் பயணித்த இருவரும் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பிய துடன் ஒரு தொகுதி மீன்பிடி வலைகள் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டன.

சம்பவ இடத்திற்கு விரைந்த அப்பகுதி மீனவர்கள் குறித்த இரு மீனவர்களையும் பாது காப்பாக மீட்டு விபத்துக்குள்ளான படகையும் கரைக்குக் கொண்டு வந்தனர்.



# அத்துமீறலை நிறுத்தும்வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை



இலங்கை இந்திய கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட இழுவைமடி வலைகளின் பாவனையை படிப்படியாக குறைக்க தாங்கள் திறந்த மனதுடன் இருப்பதாக தமிழக மீனவர்கள் கூறுவதை ஒரு ஏமாற்று வேலை என கூறி அந்த வாக்குறுதியை இலங்கை மீனவர்கள் நிராகரித்துள்ளனர்.

தொடர்ந்து பல தசாபதங்களாக பாக்கு நீரணைப் பகுதியில் இருநாட்டு மீனவர்களுக்கும் இடையே தொடர்ந்து பிரச்சினைகள் நிலவி வரும் நிலையில், இந்திய விஜயத்தில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்தியப் பிரதமருடன் இது குறித்து உரையாடியிருந்தார்.

பொருளாதார கூட்டுறவு, பாதுகாப்பு அம்சங்கள், தொழில் வளர்ச்சி, முதலீடு ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு இருநாட்டு தலைவர்களின் சந்திப்பில் மீனவர்களின் பிரச்சினையும் முக்கியமாக பேசப்பட்டதாக இருதரப்பும் தெரிவித்துள்ளது.

“மீனவர்கள் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் கையாளப்பட வேண்டும் என்பது குறித்து நாங்கள் கலந்துரையாடினோம்” என இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் கூட்டாக இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்தார். இதேவேளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தமது எக்ஸ் சமூக வலைதளத்தில், தம்மிடையேயான உரையாடலில், “சட்டவிரோத மீன்பிடியை நிறுத்துவது” குறித்தும் பேசப்பட்டதாக பதிவிட்டுள்ளார். மேலும் இந்திய பிரதமருடன் கூட்டாக பேசும் போது, பாக்கு நீரணைப் பகுதியில், சட்டவிரோத மீன்பிடி முறைகள் மூலம் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது என்ற தமது கவலையை வெளிப்படுத்தினார்.

மீனவர்கள் விடயம் குறித்த ஆறாவது கூட்டம் அண்மையில் முடிவடைந்ததை வர வேற்றநாங்கள், மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு கூட்டு அணுகுமுறையின் மூலம் நீடித்திருக்கும் வகையில் அணுக வேண்டும் என்பதையும் நாம் கலந்துரையாடினோம். சீர் செய்ய முடியாத வகையில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும், இரு நாடுகளிலும் தடை செய்யப்பட்டுள்ள இழுவைமடி வலையை பயன்படுத்தப்படுவதை உணரந்து, உடனடியாக அந்த நடைமுறை நிறுத்தப்பட வேண்டும் என நான் வேண்டுகோள் விடுத்தேன்”.

இரு நாட்டு தலைவர்களும் மீனவர்கள் பிரச்சினை குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளதையும் அதை சரி செய்ய எடுக்கப்படவுள்ள முன்னெடுப்புகள் மற்றும் இந்திய பிரதமரின் கருத்துகளை வரவேற்பதாக இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் சங்கத்தின் தலைவர் பி.ஜேசுராஜா கூறுகிறார்.

“இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு வந்ததையும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும் வெளிப்படையாக பேசியுள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். இழுவைமடி வலை குறித்து இலங்கையின் வட மாகாண மீனவர்களின் கவலைகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம். அதை நாங்கள் படிப்படியாக குறைப்போம் மேலும் அந்த வழிமுறைகளை தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் சங்கங்களுடன் கலந்துரையாடுவோம்”.

“மனிதாபிமான வழிகள் என்றால் என்ன”? என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளரும், வட மாகாண கடற்றொ ழிலாளர் இணையத்தின் செயலாளருமான மொஹமட் ஆலம் கேள்வி எழுப்பியுள்ளார். “மனிதாபிமானம் என்பது யாருக்குரியது? அதாவது இந்திய மீனவர்களை மனிதாபிமானத்துடன் பார்க்கச் சொல்கிறாரா? அல்லது வட பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களை மனிதாபி மானத்துடன் பார்க்கச் சொல்கிறாரா? உண்மையில் மனிதா பிமானத்துடன் வட பகுதி மீனவர்களையே பார்க்க வேண்டும். வாழ்வாதாரத்தாலும், தொழில் உபகரணத்தாலும், இயற்கை சீற்றங்களின்போதும் பாதிக்கப்பட்டவர்கள் வட பகுதி மீனவர்கள். கோரிக்கை வைக்கும் பிரதமர் தரப்பில் இருந்து பார்த்தால், அவர் கைது நடவடிக்கைகளை நிறுத்துங்கள். அல்லது கைது செய்யப்பட்ட படகுகளை விடுவியுங்கள். மீனவர்களை விடுவியுங்கள். எங்களது மீனவர்கள் வந்து உங்கள் கடல் பரப்பில் மீன்பிடிக்க அனுமதியுங்கள் என்றுதான் அவர் கூறுகிறார். காரணம் அவர் அவர் நாட்டு மக்கள் தொடர்பில்தானே பேசுவார். பாதிக்கப்பட்ட மக்களிடம் மனிதாபிமான கோரிக்கையை வைப்பது வேடிக்கையாக இருக்கின்றது”.

ஆனால், வட மாகாண மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து தாங்கள் முழுமையாக உணர்ந்துள்ளதாகவும், அவர்களின் கவலைகளை பகிர்ந்துகொள்வதாகவும் ஜேசுராஜா கூறுகிறார். “வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நாங்கள் மதிக்கிறோம், அதை அங்கீகரிக்கிறோம். அவர்களின் வாழ்வாதாரத்தை நாங்கள் எந்த வகையிலும் பாதிப்படையச் செய்யமாட்டோம். தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை குறைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் அதற்கு கால அவகாசமும், தமிழக மற்றும் இந்திய அரசுகளிடமிருந்து மாற்று ஆதரவும் தேவை. இரு தரப்பும் கைது செய்த மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இரு தரப்பு மீனவர்களுக்கும் நேருக்கு நேர் சந்தித்து உரையாடுவது சுமுகமான தீர்வுக்கு வழி வகுக்கும்”. ஜேசுராஜாவின் கருத்துகள் திருப்தியளிக்கவில்லை என்கிறார் மொஹமட் ஆலம். அவரது கருத்து ஏற்புடையதல்ல மாத்திரமல்ல, அது நம்பிக்கை அளிப்பதாகவும் இல்லை என்கிறார்.

“ஒரு தரம் இல்லை. பலமுறை இந்த கருத்தை அவர்கள் முன்வைத்துள்ளனர். 2010இல் வட பகுதி மீனவர்கள் அங்கு சென்றபோதும் இதே கருத்தைதான் முன்வைத்தார்கள். உத்தியோகபூர்வமற்ற பல பேச்சுக்களின்போது ஒரு வருடம் தாருங்கள், இரண்டு வருடம் தாருங்கள் என தொடர்ச்சியாக கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். 2016ஆம் ஆண்டு வெளிவிவார அமைச்சு மட்டத்திலான ஒரு உத்தியோகபூர்வ பேச்சு நடந்தது. இழுவை மடியை பயன்படுத்தாமல் இருப்பது மற்றும் இலங்கை கடல் பரப்பிற்குள் நுழையாமல் ஆழ்கடலுக்கு தமிழக மீனவர்களை அனுப்புவது குறித்து தீர்மானம் எட்டப்பட்டது. எனினும் என்ன நடந்தது? இதன்போதும் தமிழக மீனவர்கள் கால அவகாசம் கேட்டனர். எட்டு வருடம் கழித்தும் இதே கோரிக்கையை முன்வைக்கின்றனர். மாறுவது குறித்த எவ்வித சிந்தனையும் தமிழக மீனவர்களுக்கு இல்லை. அவர்கள் ஒருபோதும் மாறமாட்டார்கள்”.

இரு தரப்பு மீனவர்களும் தங்களிடையேயான பிரச்சினைகளை புரிந்துகொள்கிறார்கள் என்றும், நேரடி பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமான முடிவுகளுக்கு இட்டுச்செல்லும் என்றும் ஜேசுராஜா வாதிடுகிறார்.

“எமது சகோதரர்களுடன் வெளிப்படையாக உரையாடி ஒரு புரிந்துணர்வுக்கு வர முடியும், அதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். அதன் பிறகு அது அதிகாரிகள் மட்டத்திற்குச் சென்று இறுதி செய்யப்படலாம். இதில் அரசியலும் கூடாது”. மொஹம்ட் ஆலம் “அவ்வாறான பேச்சுவார்த்தைகள் பயனற்றவை” என்கிறார்.

“மீனவர்கள் மத்தியில் பேச்சு நடத்துவோம் என 2016ஆம் ஆண்டும் ஒரு தீர்மானம் எட்டப்பட்டது. நாங்கள் பேசுவதற்குத் தயார். அதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அவர்கள் அவர்கள் தொழில்முறையை செய்துகொண்டு கடலில் இருக்கும்போது எவ்வாறு பேசுவது? அதற்கு நாங்கள் தயார் இல்லை. இந்திய துணை தூதுவரை சந்தித்தபோது கூட அவர்களை ஓரிரு மாதங்களுக்கு இழுவை மடி தொழிலை நிறுத்தி நல்லெண்ண சமிக்ஞையை காட்டச் சொல்லுங்கள் என்றோம். எனினும் அவர்கள் அதனை செய்யவில்லை. அவ்வாறு பேச்சு நடத்தி பிரயோசனமில்லை”.

தமிழகத்தின் மீனவர் சங்கங்களின் தலைவர்கள், அந்நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் நேரடியாக வருகைத்தந்து, பார்வையிட்டு வடக்கின் தமிழ் மீனவர்களின் வாழ்க்கை அவர்கள் படும் துன்ப, துயரங்களை அறிந்துகொள்ள வேண்டுமெனவும், மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளரும், வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளருமான மொஹமட் ஆலம் கோரிக்கை விடுக்கின்றார்.

“தமிழக மக்கள் பிரதிநிதிகள், மீன்பிடியுடன் தொடர்புடைய அதிகாரிகள், மீனவர் சங்கத் தலைவர்கள் வந்து எங்கள் மீனவர்களை நேரடியாக சந்திக்க வேண்டும். கொழும்பில் வந்து அறையில் அமர்ந்து பேச்சு நடத்தி பிரயோசனமில்லை. அவர்கள் அனைவரும் எங்கள் பிரதேசத்திற்கு வந்து எங்கள் வாழ்க்கையை, எங்கள் கஷ்டங்களை நேரடியாக பார்க்க வேண்டும். முடிந்தால் கடலுக்குச் சென்று இந்திய மீனவர்களின் அத்துமீறலை, அந்த அழிவை நேரடியாக பார்க்க வேண்டும்”

# தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா அநுர அரசு



**13 தொடர்பில் கடந்த அரசாங்கங்களைப் போல் அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கமும் முன்னுக்குப் முரணாண கருத்துக்களை கூறி தமிழ் மக்களின் வாக்கு வங்கிக்காக செயற்படுகின்றதா என்ற கேள்வி எழுகிறது..!**



(யதுகுலக்கண்ணா ரவிநாதன்,வவுனியா)

நாட்டில் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற்று அதன் பரபரப்பு முடிவதற்கு முன்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, 10 ஆவது நாடாளுமன்ற தேர்தல் கடந்த நவம்பர் 14 ஆம் திகதி நடைபெற்றது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலானது இலங்கை அரசியலில் ஒரு திரும்பு முனையாக அமைந்ததுடன், உலக நாடுகளையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஜேவிபி ஆனது தேசிய மக்கள் சக்தி என்ற புதிய முகமூடியோடு வந்து ஜனாதிபதி தேர்தலை வெற்றி கொண்டுள்ளதுடன், நாடாளுமன்றத்தையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கைப்பற்றியுள்ளது.

ஊழல் தொடர்பான பிரச்சினைகள், கொலை குற்றச்சாட்டு வழக்குகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பார் பேமிற் விவகாரம் என பல விசாரணைகளை ஆரம்பித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம். தற்போதைய அரசாங்கத்திற்கு பல்வேறு நாடுகளும் உதவிகளை வழங்கியுள்ளதுடன், மேற்குலம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தை வளைத்து போடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளன. நாட்டில் ஊழல் ஒழித்து நல்லதொரு ஆட்சியை ஏற்படுத்தப் போவதாக தென்னிலங்கையில் வாக்கு வங்கியை அதிகரிக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் தமிழ் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் எவ்வாறு செயற்படப் போகின்றது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் வடக்கு, கிழக்கு பகுதியிலும் இளைஞர், யுவதிகள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி மீதான ஒரு ஈர்ப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்த ஈர்ப்பானது கடந்த கால தமிழ் அரசியல்வாதிகள் மீதான வெறுப்புணர்வால் ஏற்பட்டதொன்று என்றுகூறலாம்.

ஊழல், சுகபோக வாழ்க்கை போன்றவற்றுக்கு எதிராக அநுர குமார திஸாநாயக்கவின் தரப்பு முன்னெடுக்கும் செயற்பாட்டால் ஏற்பட்ட கவர்ச்சி. அந்த ஈர்ப்பு நாடாளுமன்ற தேர்தலில் பெரு வெற்றியைப் பெற்றுக் கொடுத்த போதும், அதனை இந்த அரசாங்கம் தொடர்ந்து தக்க வைக்க முயலுமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

ஜனாதிபதி தேர்தலின் போது இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்ற பிரசாரங்கள் தேசிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வினையும் பெற்றுக்கொடுப்பதாகவும் கூறப்பட்டது. அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் தேசிய மக்கள் சக்தி மக்கள் நம்பும் படியாக தமது கருத்துக்களை முன்னெடுத்திருந்தன.

ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் தெரிவித்து வரும் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்களையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

ஐ.நா ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாடு நடைபெற்றது. அதில் இலங்கை விவகாரம் குறித்து மீண்டும் கவனம் செலுத்தப்பட்டு, இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தெரிவித்து இருந்தது. இது தொடர்பில் கருத்து கூறிய அமைச்சர் விஜித ஹேரத், இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் எந்த தீர்மானத்தையும் இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனினும், உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமை பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பது குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என தெரிவித்துள்ளார். உள்ளக பொறிமுறையில் நம்பிக்கையிழந்த தமிழ் மக்கள் கடந்த காலங்களில் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட நிலையில் இனப்படுகொலை க்கு சர்வதேச விசாரணையை கோரி நிற்கின்றனர். இதற்கு இந்த அரசாங்கமும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், உள்ளக விசாரணையை கூட நீதியாக நடத்துமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள பயன்படுத்தி வருகின்றனர். தமிழ் மக்கள் அதனை கோரவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகார பகிர்வு தமிழ் மக்களுக்கு தேவையில்லை என தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படியாயின் கடந்த அரசாங்கங்களைப் போல் அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கமும் முன் பின் முரணாண கருத்துக்களை கூறி தமிழ் மக்களின் வாக்கு வங்கிக்காக செயற்படுகின்றதா என்ற கேள்வி எழுகிறது.

இந்த நாட்டை ஆட்சி செய்த முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன போன்ற கட்சிகளில் இருந்து வந்த 8 நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சரியான வகையில் கையாளாது விட்டதன் விளைவே இந்த நாட்டில் இன முறுகல் ஏற்பட்டமைக்கு பிரதான காரணம். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கும் அதுவே காரணம் என்பதையும் மறுத்துவிட முடியாது. அத்தகையதொரு தவறை தேசிய மக்கள் சக்தியின் அனுரகுமார திஸநாயக்காவும் விடப் போகின்றாரா? இந்த நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பி ஒரு தாய் பிள்ளைகளாக வாழக் கூடிய நிலையை உருவாக்க இந்த அரசாங்கமும் முயலுமா என்பதே மக்கள் முன் உள்ள எதிர்பார்பாகும்.

# கொவிட் தகனம்; கடந்த அரசின் உணர்ச்சியற்ற கொடூர தீர்மானம்

கடந்த அரசாங்கம் கொவிட் தொற்றுநோய் தொடர்பில் மேற்கொண்ட தீர்மானத்தை எந்தவகையிலும் நியாயப்படுத்தப்படக்கூடியதல்லவெனத் தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இது மிகவும் உணர்ச்சியற்ற மற்றும் மிகவும் கொடூரமான ஒரு தீர்மானமென நேற்று முன்தினம் (17) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஒரு மரணத்திற்குப் பின்னர் நிறைவேற்றப்படும் சம்பிரதாயங்கள் மூலம் குடும்பத்தினர் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தவும் துக்கத்தைக் குறைக்கவும் முடிகிறது. அதனால்தான் இதற்கு சமய ரீதியான பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்றுநோய் போன்ற நிச்சயமற்ற சூழ்நிலையில் இத்தகைய மரபுகள் மிகவும் முக்கியமானவை. இப்படியான சந்தர்ப்பத்தில் இத்தகையதொரு கொடூரமான தீர்மானத்தை மேற்கொண்டமையை எந்தவகையிலும் அனுமதிக்க முடியாது. அதற்கு அரசியல் அல்லது வேறு எந்த நியாயமும் செல்லுபடியாகாது. விஞ்ஞான அடிப்படையின்றி இதுபோன்றதொரு தீர்மானத்தை மேற்கொள்வது நியாயமற்றது. அதனால், எந்த ஒரு பிரிவினருக்கும் இதுபோன்ற துன்பத்தை ஏற்படுத்தும் அல்லது சமய மரபுகளை அவமதிக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் எமது அரசாங்கம் ஒருபோதும் மேற்கொள்ளாது. ஏதேனும் ஒரு சம்பவம் நடந்தால் அது அப்போதைய



அரசியல் கலாசாரத்தின் அடிப்படையில் அந்த அதிகாரிகள் மேற்கொண்ட தீர்மானம் என்று நாம் நினைக்கிறோம். அந்த கலாசாரத்தை நாம் மாற்றுவோம். மீண்டும் மக்களைப் பாதிக்கும் இவ்வாறான தீர்மானங்களை அதிகாரிகள் எடுக்க இடமளிக்க மாட்டோம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

இதன்மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை நாம் அறிவோம். அதற்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்து கலந்துரையாட நாங்கள் தயாராக உள்ளோம். கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களை தகனம் செய்ததன் மூலம் சமய மரபுகளுக்கும் அம்மக்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதியை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

## கனேடிய அமைச்சர் கரி குகதாசன் எம்.பி சந்திப்பு



(ஏ.எச் ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன், கனேடிய அரசின் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கரி ஆனந்தசங்கரியைச் சந்தித்தார். இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட சிக்கல்களைப் பற்றி கலந்துரையாடினார் இச் சந்திப்பு ஒரு மணிநேரம் வரை நீடித்தது குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா செடிகளை பயிரிட்டவர் கைது

(எம்.ரீ.ஆரிப்)

தாசில்தார் மலர் சாகுபடி என்ற போர்வையில் கஞ்சா செடிகளை பயிரிட்டு வந்த நபரை கஞ்சாவுடன் பொலிஸார் கைது செய்தனர். குறித்த நபர் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வரும் நிலையில் கஞ்சா செடிகளை வளர்த்து அவற்றிலிருந்து சிறிய அளவில் உலர் கஞ்சா விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவரிடமிருந்து ஒரு கிலோ உலர்ந்த கஞ்சா மற்றும் 17 கஞ்சா செடிகளுடன் அநுராதபுரம் தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர். அநுராதபுரம் மிஹிந்தலை வீதியில் வசித்துவரும் 39 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கஞ்சா பயிரிட பயன்படும் விதைகள் ஏழு அடி உயரமுள்ள நன்கு வளர்ந்த 16 கஞ்சா செடிகள் ஒரு கிலோ கிராம் உலர்ந்த கஞ்சா விற்பனைக்காக சிறியளவில் பொதி செய்யப்பட்ட 11 கஞ்சா பொதிகள் என்பனவைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர் வீட்டில் தாசில்தார் பூக்களை பயிரிட்டு வருவதாகவும் சந்தேகத்திற்கிடமின்றி சிறிது காலமாக இந்த பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு வந்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

## மரக்கிளை உடைந்து விழுந்ததில் சிறுவன் மரணம்

(எம்.ரீ.ஆரிப்)

ஹொரவப்பொத்தானை எலபத்வெவ பகுதியில் பாலர் பாடசாலை முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் மீது மரக்கிளை உடைந்து விழுந்ததில் சிறுவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது எலபத்வெவ மொரகேவ பகுதியைச் சேர்ந்த ஆர். எம்.நெஸது துலாஷ் பெரேரா என்ற 05 வயது 06 மாதமுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். மொரகேவ பகுதியில் அமைந்துள்ள பாலர் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இந்த சிறுவன் பாடசாலை முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது மரக்கிளை முறிந்து விழுந்ததில் காயத்திற்குள்ளான நிலையில் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

## முகாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜாவத்தை மையவாடியில் பிரார்த்தனை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம். எச். எம்.அஷ்ரபின் நினைவாக, தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி.தலைமையில் 10 ஆவது நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், எம். எல் .ஏ .எம்.ஹிஸ்புல்லாஹ், எம் .எஸ் உதுமாலெப்பை,எம்.எஸ்.நளீம் ஆகியோர் நேற்றுப் புதன் கிழமை(18) காலை கொழும்பு -7,ஜாவத்தை முஸ்லிம் மையவாடியில் அன்னாரின் அடக்கஸ்தலத்தின் அருகில் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட



உறுப்பினர் மௌலவி கலீல் பீ.ஏ.(மதனி) மறைந்த தலைவர் அஷ்ரபின் ஆன்மீக ஈடேற்றத்திற்காகவும், சிறப்பான மறுமை வாழ்வுக்காகவும் துஆப் பிரார்த்தனையை முன்னின்று நடத்தினார்.

## தகைமையை வெளிப்படுத்தினார் பிரதி அமைச்சர் அருண்

(எஸ்.கீதபொன்கலன்)

வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சரும்,திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அருண் ஹேமச்சந்ரா தமது சட்ட இளமாணிப் பட்டச் சான்றிதழை வெளியிட்டு தமது உயர்கல்வித் தகைமையை வெளிப்படுத்தியுள்ளார். தமது உயர் கல்வித்தகைமை தொடர்பில் சில விசமிகளால் பரப்பப்பட்டு வரும் அடிப்படைகள் எதுவுமற்ற பொய்க்குற்றச் சாட்டுகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் கடந்த ஞாயிறன்று(15) தனது முகநூலில் அவர் தமது பட்டச் சான்றிதழ் மற்றும் சான்றிதழ் தொடர்பான விபர ஆவணம் என்பவற்றை வெளியிட்டுள்ளார். மேலும் தமது மேற்படி பட்டம் தொடர்பில் சந்தேகம் உள்ள எவரும் விசாரித்து அறிந்து கொள்ளும் வகையில் தாம் கல்வி கற்ற லண்டன் பல்கலைக்கழகத்தின் தெளிவான முகவரி மற்றும் விபரங்களையும் வழங்கியுள்ளார்.

அவர் வழங்கியுள்ள விபரங்களின் படி இவர் லண்டன் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் பிரிவில் சட்ட இளமாணி(சிறப்பு) பட்டத்தை 2018 ம் ஆண்டில் பெற்றுள்ளார்.



### வெலிகம ஸலாஹிய்யாவில்

## ஹாபிழ்மார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

(வெலிகம நிருபர்)

வெலிகம ஸலாஹிய்யா சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கும் இரு ஹாபிழ்மார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று (19) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. பாடசாலையின் முகாமையாளர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் எம். எம். ஸைத் முக்ரிம் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில், பிரதம அதிதியாக அஷ்ஷேக் யஹ்யா (பலாஹி) கலந்து சிறப்பிப்பிக்கவுள்ளார். அத்தோடு, பிரதம பேச்சாளராக வெலிகம மத்ரஸதுல் பாரி அறபுக் கல்லூரியின் அதிபரும்,மாத்தறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவருமான அஷ்ஷேக் அல்-ஹாபிழ் ஏ. ஆர். அப்துர்ரஹ்மான் (மழாஹிரி) கலந்து கொள்கின்றார். தரம் 9ல் கல்வி கற்கும் (ஆங்கில மொழி மூலம்) அல்-ஹாபிழ் உஸ்மான் ஸபீஉத்தீன் ஒரே நாளில் தொழுகையில் முழுக் குர்ஆனையும் மனனமாக ஓதி சாதனை படைத்துள்ளார். மேலும், அல்-ஹாபிழ் அம்மார் ஸப்வான் கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் தோற்றி 9 பாடங்களிலும் “A” சித்தி பெற்றதையும் பாராட்டு முகமாகவே இக் கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ் விரு ஹாபிழ்மார்களும் நினைவுச் சின்னங்கள் மற்றும் பாரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

## பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா



(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி வன்னிமுந்தலில் கடந்த 26 வருடங்களாக சிறப்பாக நடைபெற்று வரும் மொஹமட் ஹனிபா பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (17) பாலர் பாடசாலையின் அதிபர் ஏ.சீ.ஐ சாதிக்கா தலைமையில் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் அதிதிகளாக. கற்பிட்டி நகரின் ஏனைய பாலர் பாடசாலை அதிபர்கள் மற்றும் வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் றொசான் மற்றும் லஹிரு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## உப்பு உற்பத்தியாளர்களுக்கு உதவி வழங்க வேண்டும்



(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் உப்பு உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் உதவி வழங்க வேண்டும் என மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் பிரதி தலைவர் மௌலவி பீ.ஏ.எஸ். சுப்யான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உப்பு உற்பத்திக்கு பெயர் பெற்ற இடம் புத்தளமாகும். இலங்கையின் உப்பு உற்பத்தியில் 45% இற்கும் அதிகமான உப்பு புத்தளத்திலேயே உற்பத்தியாகி வருகின்றது. புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், கல்பிட்டி ,வனாத்தவில்லு மற்றும் முந்தல் பிரதேச செயலகப் பகுதிகளில் 4000 ஹெக்டேயர் பரப்பளவில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் உப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை இத்தொழில் மூலம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேலை வாய்ப்பு பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 20000 விட அதிகமானதாகும். இவ்வாறான ஒரு நிலையில் புத்தளத்தில் தொடர் மழை, வெள்ளம் காரணமாக உப்பு உற்பத்தி தொழில் நஷ்டம் அடைந்து வருவதாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் தொடர்ச்சியாக உப்பு உற்பத்தியை தொடர்ந்து மேற்கொள்வதில் பல சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். இதனால் இலங்கையில் உப்பு நுகர்வோரின் 46 மெட்ரிக் தொன் உப்பு உற்பத்தி புத்தளத்திலிருந்தே செய்யப்படுவதாக புத்தளம் உப்பு நிறுவனத்தின் தகவலின்படி அறியக்கூடியதாக உள்ளது.

நாடளாவிய ரீதியில் பலவிதத்தில் நுகர்வோரும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அரசாங்கம் உப்பு உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் அறிந்து அவர்களுக்குரிய நஷ்டத்தை ஈடு செய்வதற்கும், நஷ்ட ஈடுகளையும் வழங்குவதுடன் உப்பு உற்பத்தி தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் நிவாரணங்கள் வழங்க முன்வர வேண்டுமென மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் பிரதி தலைவர் மௌலவி பீ.ஏ. சுப்யான் மேலும் தெரிவித்துள்ளார்.

# நான்கு வான் கதவுகள் திறப்பு



▮ எம்.என்.எம்.புஹாரி

தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக கந்தளாய் குளத்திற்கு வந்து சேரும் நீரை கட்டுப்படுத்துவதற்காக கந்தளாய் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளரால் நான்கு வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டுள்ளன.

தற்போது குளத்திலுள்ள நீர்மட்டத்தை குறைக்கும் வகையிலும், கந்தளாய் குளத்தின் கீழ் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் குளத்தின் 10 மதகுகளில் நான்கு மதகுகள் தலா நான்கு அடி திறக்கப்பட்டு தண்ணீர் திறந்துவிடப்பட்டதாகவும், அதில் இருந்து வெளியேறும் தண்ணீரின் கொள்ளளவு வினாடிக்கு 700 கன அடி என்றும் நீர்ப்பாசன பொறியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# தோப்பூரில் டெங்கு சிரமதானம்



▮ எம்.என்.எம்.புஹாரி

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தோப்பூர் பிரதேசத்தில் நேற்று(18) வீடுகளில் டெங்கு பரிசோதனையும், சிரமதானமும் முன்னெடுக்கப்பட்டன. மூதூர் சுகாதாரப் பணிமனை மூதூர் பிரதேச சபையோடு இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது டெங்கு பரவும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்தோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அத்தோடு தோப்பூர் உப அலுவலக ஊழியர்களினால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

# பெரியபுல்லுமலை கிராம மக்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி



▮ வெல்லாவெளி நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரியபுல்லுமலை கிராம மக்களுக்கு அபயம் அமைப்பினால் இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அபயம் அமைப்பினர் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், செங்கலடி வைத்தியசாலை, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றோடு இணைந்து இலவச மருத்துவப் பரிசோதனையை பெரியபுல்லுமலை கிராமத்தில் ஏற்பாடு செய்து நடத்தியிருந்தனர்.

இதன்போது 150 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு மருத்துவப் பரிசோதனையில் ஈடுபட்டு அதற்கான மருந்துகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டனர்.

மேலும் பார்வைக் குறைபாடுள்ள 100 பேர் இப்பரிசோதனையின் போது இனங்காணப் பட்டிருந்தனர். அவ்வாறு இனங்காணப்பட்ட 100 பேருக்கும் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் இதன்போது வைத்திய பரிசோதனையை மேற்கொண்டனர். சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், முதியோர்கள் எனப்பலரும் மருத்துவ உதவியைப் பெற்றுக்கொண்டனர்.

# மட்டக்களப்பில் கசிப்பு, போதைக்கு எதிராக கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்





▮ ஆரையம்பதி நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமாக கசிப்பு மற்றும் போதைப்பொருள் விற்பனைகளை தடுக்குமாறு பரித்திச்சேனையிலிருந்து 10 கிலோமீற்றர் தூரம் மக்கள் பேரணியாக கவனஈர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளில் கசிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையினால் பெரும் பிரச்சினைகள் ஏற்படுவதாக தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் இந்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

பரித்திச்சேனை மங்கையர் கொத்தனி அமைப்பின் ஏற்பாட்டில் அப்பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்த கவனஈர்ப்பு பேரணியை பரித்திச்சேனையிலிருந்து தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் வரை முன்னெடுக்கப்பட்டது

அங்குள்ள விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் பிரதேசத்தில் காணப்படும் சட்ட விரோத கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகளை தடுக்க உதவுமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு மகஜர் ஒன்றும் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பேரணியானது கொக்கட்டிச்சோலை வவுணதீவு பிரதான வீதியூடாக வந்து வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவும் கவனஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தின்போது ‘போதைப்பொருள் வியாபாரிகளை பாதுகாக்காதே’, ‘கசிப்பு பாவனையை தடுத்து நிறுத்து’ போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. இதன்போது வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் சந்தித்த போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்தனர்.

குறித்த பகுதியில் பொலிஸார் போதைப்பொருள் பாவனையை தடுக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், அதற்காக பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் எனவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்தார். அதனை தொடர்ந்து பேரணியானது மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக வருகைதந்து அங்கும் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்த மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யோகராஜாவுடன் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கலந்துரையாடினார்கள்.

### தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்காக

# தமிழர் - முஸ்லிம் தரப்பினர் ஒரே மேசையிலிருந்து பேச வேண்டும்

▮ நூருல் ஹுதா உமர்

நாட்டில் தீர்க்கப்படாமல் பல பிரச்சினைகள் பல தசாப்தங்களாக தேங்கி கிடக்கின்றன. அவற்றுக்கொரு தீர்வுப் பொறி முன்வைக்கப்பட வேண்டுமென்றால் அரசாங்கத்துடன் தமிழர் – முஸ்லிம் தரப்புகள் ஒரே மேசையில் இருந்து பேசி தீர்க்க வேண்டுமென கிழக்கின் கேடயம் பிரதானியும், அகில இலங்கை மக்கள் காங்கிர ஸின் உயர்பீட உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் (17) ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட உயர்பீட உறுப்பினர் எஸ்.எம். சபீஸ் ஒரு தீர்வு பொறி முன் வைக்கப்பட வேண்டியது சில நாடுகளின்



அழுத்தத்தினாலோ அல்லது சில குழுக்களின் தேவைகளுக்காகவோ தீர்மானிக்க முடியாது. பேச்சுவார்த்தைகளின் போது கட்டாயம் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அந்த பேச்சுவார்த்தை மேசையில் இருக்க வேண்டும். அதனூடாகத்தான் யாருக்கும் பாதகமில்லாத தீர்வை பெற முடியும். யாருக்காவது நியாயமான தீர்வுகள் கிடைக்காத போது அது இன்னொரு போராட்டத்தை நோக்கி இழுத்துச் சென்றுவிடும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

மூன்று தசாப்த போராட்டத்திற்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்றால் அங்கு ஒரே மேசையில் பேசி தீர்வுகள் எட்டப்பட வேண்டும். கடந்த காலங்களில் முஸ்லிங்கள் புறக்கணிக்கப்பட்ட போதும் கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள் சம்மேளனத்தினூடாக நாங்கள்அதை வலியுறுத்தினோம். பேச்சுவார்த்தை என்று வருகின்ற போது அரசாங்கமும், தமிழர்களும், முஸ்லிங்களும் சமமாக இருந்து பேச வேண்டும் என்றார்.

# நூலகர்களைப் பாராட்டி விருது வழங்கல்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, சமூகத்தினரிடையே புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கையிலுள்ள நூலகங்களால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கும் நூலகர்களைப் பாராட்டி விருது வழங்கும் விழா, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் இன்று கொழும்பு 7இல் அமைந்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சின் டங்கன் வைட் கேட் போர்கூடத்தில் நடைபெறும். இதனை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை ஏற்பாடு செய்துள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்திற்காக, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, நாட்டிலுள்ள பிற பொது நூலகங்கள் மற்றும் அரச, அரச சாரா நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

அரசாங்கத்தின் அனுசரணையில், 2004 ஆம் ஆண்டு முதல், அக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக அறிவிக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டு இத்திட்டத்தின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும். “உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே”என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

## வாகன இறக்குமதிக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது, “2028ஆம் ஆண்டுமுதல் நாம் கடனை மீள செலுத்த வேண்டும் எனும் கருத்தொன்றை சமூகத்தில் பரப்பி வருகின்றனர். சில பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றனர். 2028ஆம் ஆண்டாகும் போதும் எமது அரசாங்கம்தான் இருக்கும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

2022, 2023இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியான நிலைமையை மீண்டும் ஒருபோதும் ஏற்பட நாம் அனுமதியளிக்க மாட்டோம். 12.5 பில்லியன் சர்வதேச கடன் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதில் 11.5 பில்லியன் டொலர் 2015 மற்றும் 2019 இற்கு இடைப்பட்ட காலத்தில் பெறப்பட்ட கடனாகும். ஆலோசனைகள் கூறுபவர்கள் அப்போது அவர்களுக்கு கூறியிருக்க முடியும். 2028ஆம் ஆண்டளவில் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை 15.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

உழைக்கும் போது செலுத்தும் (PAYE) வரி விலக்கு வரம்பை 100,000 ரூபாவிலிருந்து 150,000 ரூபா வரை அதிகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) அரசாங்கம் உடன்படிக்கைக்கு வந்துள்ளது. இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) மூன்றாவது மீளாய்வு தொடர்பாக ஐ.எம்.எப். உடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, வருமான வரி வரம்பை அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

புதிய வரி திருத்தங்களின் பிரகாரம் தனிநபர் வருமானமாக ரூ.500,000 முதல் ஒரு மில்லியனை பெறுபவர் வரியின் முதல் கட்டத்தில் உள்ளடகப்பட்டுவதுடன், அவர் 6 வீத வரி விகிதத்திற்கு உட்படுவார். 150,000 ரூபாவுக்கு குறைவான வருமானத்தை பெறுபவர்கள் முழுமையாக வரி விலக்குக்கு உட்படுவர். 2 இலட்சம் ரூபா வருமானம் பெறுபவருக்கு 71 வீதம் விரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது, ரூ.250,000 வரை வருமானம் பெறுபவருக்கு 61 வீதமும், 300,000 ரூபா வரை வருமானம் பெறுபவருக்கு 47 வீதமும், 350,000 ரூபா வரை வருமானம் பெறுபவருக்கு 25.5 வீதமும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கு அதிகமான வரியும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு குறைவான வரியும் காணப்பட்டது. தற்போது, குறைவான வரி பெறுவோருக்கு குறைவான வரியும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு அதிக வரியும் அறவிடும் முறை உருவாகியுள்ளது.

தடுத்து வைக்கும் வரி 5 வீதத்திலிருந்து 10 வீதமாக அதிகரிக்கப்படும். சேவைகள் ஏற்றுமதிக்கான வரியை 30 வீதத்திலிருந்து 15 வீதமாக குறைக்க சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தனியார் வாகங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 14ஆம் திகதி முதல் போக்குவரத்து மற்றும் விசேட தேவைக்கான வாகனங்கள் இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் தனியார் பயன்பாட்டுக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வாகன இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன், ஊடாக மீண்டும் டொலர் நெருக்கடிக்கு நாடு முகங்கொடுக்காது. அதற்கான மாற்று வழிகள் உருவாக்கப்பட்டுள்ளது. வாகன சந்தையும் அதை சார்ந்த தொழில்துறையும் மிகவும் பெரியது. நீண்டகாலம் இதனை மூடி வைத்திருக்க முடியாது.

இதுவேளை, அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்கபெறாத மற்றும் அதற்கு தகுதியுள்ளவர்கள் தொடர்பில் மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும். எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு குறித்த கொடுப்பனவை வழங்கும் வகையில் விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். வங்கிக் கணக்கை திறக்க முடியாது 67ஆயிரம் குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவை பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

# கொட்டகலை டிரேட்டன் தோட்ட குடியிருப்பில் பாரிய தீப்பரவல்

## குடியிருப்பாளர்கள் உறவினர்கள் வீட்டில் தஞ்சம்





(க.கிஷாந்தன்)

திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ பிரிவில் 10 வீடுகள் கொண்ட 6ஆம் இலக்க தொடர் லயக்குடியிருப்பில் நேற்று முன்தினம் (18) முற்பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரு வீடு தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், ஏனைய மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன. இந்த நான்கு வீடுகளிலும் இருந்த 22 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தீ ஏற்பட்ட போது வீட்டிலிருந்தவர்கள் எரிவதைக் கண்டு கூச்சலிட்டதாகவும், அதன் பிறகு அயலவர்கள் ஒன்றிணைந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த வீட்டிலிருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் எனப் பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன. மேலும், இவர்களுக்கான நிவாரண உதவிகளைத் தோட்ட நிர்வாகத்தின் ஊடாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது. இத்தீக்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இதேவேளை, இது தொடர்பாக திம்புள்ள,பத்தனை பொலிஸ் நிலையத்திற்கு பிரதேச வாசிகளால் தகவல் தெரிவித்து அதன்பின் சம்பவயிடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சப்ரகமுவ ஆளுநர் - இந்திய உதவி உயர்ஸ்தானிகர் சந்திப்பு



(இரத்தினபுரி நிருபர்)

சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன மற்றும் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் வி.எஸ்.சரண்யா ஆகியோருக்கிடையிலான

விசேட கலந்துரையாடல் ஒன்று சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்றது.

இதன்போது சப்ரகமுவ மாகாணத்தில் சுகாதாரம், கல்வி மற்றும் பெருந்தோட்ட மக்களின் நலன்புரி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அரசு ஊழியர்களுக்கு நிர்வாக, நகர்ப்புற மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் போன்ற துறைகளில் இந்திய அரசு பல ஆண்டுகளாக இந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது.

அதேவேளை இந்திய வீடமைப்புத் திட்டமானது சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தோட்ட சமூகத்தினருக்கான வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. சப்ரகமுவ மாகாண சபையின் மத்திய நூலகத்தில் இந்திய அரசினால் இந்திய பகுதி என்ற நூலகத்தையும் நிறுவி உள்ளது.

மேற்படி நூலகத்தை இந்திய உதவி உயர்ஸ்தானிகர் வி.எஸ்.சரண்யா நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

எதிர்காலத்தில் இந்த நூலகத்திற்கு பல்வேறு துறைகளில் எழுதப்பட்ட இந்திய நூல்கள் நன்கொடையாக வழங்கப்படும் எனவும் வி.எஸ். சரண்யா தெரிவித்தார்.

# சிறுத்தை தலை-கால்கள் வெட்டப்பட்ட நிலையில் மீட்பு



(க.கிஷாந்தன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்டப் பகுதியிலிருந்து சிறுத்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (18) பிற்பகல் மீட்கப்பட்ட குறித்த சிறுத்தையின் சடலத்திலிருந்து தலை, நான்கு கால்கள் என்பன வெட்டி அகற்றப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்டத்தின் காட்டுப் பகுதியில் சிறுத்தை ஒன்று சடலமாகக் கிடப்பதாக ஹற்றன் பொலிஸாருக்கு, தோட்டத் தொழிலாளர்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்து பார்வையிட்டபோது குறித்த சிறுத்தையின் தலை துண்டிக்கப்பட்டு நான்கு கால்கள் வெட்டப்பட்டிருந்ததாக நல்லதண்ணி வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

10 வயதுடைய குறித்த சிறுத்தையின் சடலம் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக ரந்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பேராதனைப் பல்கலை முஸ்லிம் மஜ்லிஸின் 80ஆவது ஆண்டு நிறைவு






(கண்டி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் தனது 80ஆவது ஆண்டு நிறைவு விழாவை அண்மையில் (15) 2 பொறியியற் பீட பேராசிரியர் ஈ. ஓ. ஈ. பெரேரா அரங்கில் கொண்டாடியது.

இந்நிகழ்வானது நடப்புவருட (2024) நிர்வாகக் குழு தலைவர் ஏ. ஆர்.எம். அஸீம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராதனை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் டப்ள்யு. எம்.டி. மதுஜித் பிரதம அதிதியாகவும் பல் மருத்துவ விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் பீ.எம். எச்.எஸ்.கே. பன்னேஹக அதிதியாகவும் கலந்து கொண்டனர். அத்தோடு 2024ம் ஆண்டு நிர்வாகக் குழு மற்றும் உறுப்பினர்களான இளங்கலைப் பட்டதாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முஸ்லிம் மஜ்லிஸின் 80ஆவது ஆண்டு நிறைவு விழாவில் மஜ்லிஸின் உறுப்பினர்களுக்கான விருது வழங்கலும் சிறப்பாக நடைபெற்றது.

# புதிய செயலாளர்கள் நியமனம்





(பு.கஜிந்தன்)

வடக்கு மாகாண சபைக்கு இரண்டு புதிய செயலர்களுக்கான நியமனத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று புதன்கிழமை (18) மதியம் ஆளுநர் செயலகத்தில் வழங்கி வைத்தார்.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பொ. குகநாதனுக்கும் , சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலராக திருமதி ப.ஜெயராணி ஆகியோருக்கே நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# சட்டவிரோத மணல் அகழ்வு முறியடிப்பு

(கரவெட்டி நிருபர்)

அனுமதி பத்திரமின்றி சட்டவிரோதமாக மணலை ஏற்றிச்சென்ற ரிப்பரை 40 கிலோ மீட்டர் வரை துரத்திச் சென்று கைப்பற்றிய சம்பவம் ஒன்று நேற்று பருத்தித்துறை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணலை ஏற்றிச் சென்ற ரிப்பர் வாகனத்தை பருத்தித்துறை பொலிஸ் குழுவினர் நிறுத்துமாறு சைகை காட்டியுள்ளனர். அதனை மதிக்காது ரிப்பர் வாகனம் வேகமாக சென்றுள்ளது. இந்நிலையில் சுமார் நாற்பது கிலோமீட்டர் வரை துரத்திச் சென்றுள்ள நிலையில் சாரதி ரிப்பரை நிறுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் ரிப்பரை பருத்தித்துறை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# முகநூல் காதலனால் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

(இளைஞன் கைது)

முகநூல் ஊடாக அறிந்துக்கொண்ட 17 வயதுடைய சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த இளைஞன் புத்தல பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தல பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய சிறுமி ஒருவர் படல்கும்புரை பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய இளைஞனை கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் முகநூல் ஊடாக அறிந்துக்கொண்டு அவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த சிறுமி கடந்த 16ம் திகதி தனது நண்பியின் வீட்டிற்கு சென்ற நிலையில் காதலனையும் சந்தித்துள்ளார். அதன் பின்னர்,குறித்த இளைஞன், சிறுமியை வீட்டில் விடுவதாக கூறி முச்சக்கர வண்டியில் ஏற்றிச் செல்லும் போது, புத்தல வீதியில் உள்ள தேக்குமரக்காட்டுக்கு அருகில் முச்சக்கர வண்டியை நிறுத்தி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

இது தொடர்பில் சிறுமி தாய், தந்தையிடம் தெரிவித்ததையடுத்து அவர்கள் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கு பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சிறுமி வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அரபுக் கல்லூரி மாணவர் உயிரிழப்பு

# பிணை வழங்கியோருக்கு கல்லூரிக்கு செல்ல தடை

காரைதீவு, மாவடிப்பள்ளி பாலத்தில் உழவு இயந்திரம் வெள்ள நீரில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், அரபுக் கல்லூரி மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டு , பிணையில் விடுதலை செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மீண்டும் அரபுக் கல்லூரி வளாகத்திற்குள் நுழைந்தால் பிணை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் என சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கே. கருணாகரன் புதன்கிழமை (18) உத்தரவிட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரின் விரிவான அறிக்கை கிடைக்கப் பெறும் வரை வழக்கு, விசாரணைகளுக்காக மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மன்றுக்கு ஆஜரான சம்மாந்துறை, காரைதீவு பிரதேச செயலாளர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், பொலிஸார் ஆகியோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அரச அதிகாரிகள் சரியான முறையில் தமது கடமைகளை செய்ய தவறி விட்டார்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் 45 பேர் மாரடைப்பால் மரணம்

வவுனியா பொது வைத்தியசாலையில் இவ்வாண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான 10 மாத காலப்பகுதியில் மாரடைப்பால் 45 பேர் மரணம் அடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலுக்கு அமைய குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 20 வயது தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்களில் ஒருவரும், 40 வயது தொடக்கம் 60 வயதுக்கு உட்பட்டவர்களில் 13 பேரும், 60 வயது தொடக்கம் 100 வயதுக்கு உட்பட்டவர்களில் 31 பேருமாக 45 பேர் இவ்வாறு மாரடைப்பால் மரணமாகியுள்ளனர்.

வவுனியாவில் மாரடைப்பால் மரணிப்போரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து காணப்பட்ட நிலையில் அதற்கான பல்வேறு காரணங்களும் சுகாதார திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில் நிலையத்தில் போதைப் பொருளுடன் இளைஞன் கைது



சிவனொளிபாத மலை யாத்திரை வந்த இளைஞன் ஒருவர் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஹற்றன் ரயில் நிலையத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் எனவும், அவர் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில், தனது குழுவுடன் வந்துள்ளதாகவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமித் ஷாவிற்கு எதிராக எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டம்






அம்பேத்கர் குறித்து அமித் ஷா பேசிய கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவர் மன்னிப்பு கோர வலியுறுத்தியும் எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உட்பட மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த எதிர்க்கட்சி எம்பிக்கள் ஏராளமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இந்திய அரசியலமைப்பின் சிற்பியை அமித் ஷா அவமதித்துவிட்டதாகவும் அவரது கருத்து தெரிவிப்பிற்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அமித் ஷாவின் கருத்தினை கண்டித்துப் பேசிய காங்கிரஸ் எம்பி கவுரவ் கோகாய், "அரசியலமைப்பு விவாதத்தின் போது செவ்வாய்க்கிழமை மாநிலங்களவையில் கருத்து தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, டொக்டர் பி.ஆர். அம்பேத்கரை இழிவுபடுத்திவிட்டார். பாஜகவினருக்கு அம்பேத்கர் மீது மரியாதை இல்லை என்பதையே இது காட்டுகிறது. அம்பேத்கரின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவும், அவர் வாழ்ந்த காலத்தில் அவர் எழுப்பிய பிரச்சினைகளுக்கு ஆதரவாகவும், இந்தியா கூட்டணி சார்பில், இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது" என தெரிவித்தார்.

காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் "அம்பேத்கர் மீது தனக்குள்ள எதிர்மறை மனப்பான்மையை அமித் ஷா வெளிப்படுத்தினார். நாங்கள் அவருக்கு "அம்பேத்கர் வாழ்க" என கூற முயற்சிப்போம். ஏனெனில், அவரால் அம்பேத்கரின் மரபை புல்டோசர் கொண்டு எதுவும் செய்ய முடியாது. அம்பேத்கர் மரபு என்பது ஓபிசி, எஸ்சி மற்றும் எஸ்டி மற்றும் பிற சிறுபான்மையினரின் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்காக குரல் கொடுப்பது. சாவர்க்கரின் சிந்தனை அம்பேத்கருக்கு எதிராக இருக்கும். நாங்கள் அவர்களை வெற்றி பெற அனுமதிக்க மாட்டோம். நாங்கள் அதை எதிர்த்துப் போராடுவோம். அமித் ஷா மன்னிப்பு கேட்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

மற்றொரு காங்கிரஸ் எம்பி கே.சுரேஷ் "உள்துறை அமைச்சர் அமித் ஷா, டொக்டர் பி.ஆர். அம்பேத்கரை அவமதித்துள்ளார். டொக்டர் பி.ஆர். அம்பேத்கருக்கு எதிரான இந்த கருத்துக்கு அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்" என தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் சி.ஆர் கேசவன், "நேற்றைய பேச்சு, அரசியலமைப்புக்கு எதிராக காங்கிரஸ் கட்சி செய்த வரலாற்று துரோகங்களையும், மன்னிக்க முடியாத பாவங்களையும் அம்பலப்படுத்தியது. காங்கிரஸ் கட்சி மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் செய்து, குடும்ப அரசியலை வலுப்படுத்த நமது அரசியலமைப்பை மாற்றியமைக்க முயற்சித்தது" என குற்றம் சாட்டினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டைக் குறிக்கும் விவாதத்தின் போது மாநிலங்களவையில் உரையாற்றிய அமித் ஷா, "பி.ஆர். அம்பேத்கரின் பெயரை பயன்படுத்துவது இப்போது ஒரு "பெஷன்" ஆகிவிட்டது. எதற்கெடுத்தாலும் அம்பேத்கர் என்று பேசுகிறார்கள். கடவுளின் பெயரை இவ்வாறு பலமுறை கூறினாலாவது அவர்களுக்கு சொர்க்கத்தில் இடம் கிடைத்திருக்கும்.

அம்பேத்கரின் பெயரை 100 மடங்கு அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், அவரைப் பற்றிய உங்கள் உணர்வு என்ன என்பதை நான் கூற விரும்புகிறேன். ஜவஹர்லால் நேரு தலைமையிலான அரசாங்கத்துடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து முதல் அமைச்சரவையில் இருந்து பி.ஆர்.அம்பேத்கர் இராஜினாமா செய்ய நேரிட்டது. பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினரை நடத்துவதில் திருப்தி, இல்லை என அம்பேத்கர் பலமுறை தெரிவித்துள்ளார். அவருக்கு ஒரு உத்தரவாதம் வழங்கப்பட்டது. அந்த உத்தரவாதத்தினை நிறைவேறாததால், அவர், இராஜினாமா செய்தார்" என தெரிவித்தார். இதனையே எதிர்க்கட்சியினர் கண்டனத்திற்கு உள்ளாக்கி வருகின்றனர்.

# புஷ்பா2 நெரிசலில் பலியான பெண்ணின் மகன் மூளைச்சாவு

புஷ்பா2 படத்தின் முதல் காட்சியைப் பார்க்க சென்று இறந்த பெண்ணின் மகன் மருத்துவமனையில் அனுமதிப்பட்டிருந்த நிலையில், தற்போது அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டிருக்கிறது என தகவல் வெளியாகியுள்ளது.

புஷ்பா2 திரைப்படம் நாயகன் அல்லு அர்ஜுன் முதல் காட்சியைப் பார்த்த திரையரங்கில், திரைப்படத்தைப் பார்க்கச் சென்ற பெண் கூட்ட நெரிசலில் சிக்கி இறந்துவிட, அந்தப் பெண்ணின் குழந்தை மூச்சு விடுவதற்கு சிரமத்துக்குள்ளானார். அன்றே மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக அல்லு அர்ஜுனைத் தெலுங்கானா பொலிஸ் கைது செய்தனர். இருப்பினும் சிறை வைக்கப்பட்ட ஒரே நாளில், அவர் பிணையில் வெளியே வந்தார்.

"ஒரு நடிகருக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும், அவர் குழந்தைக்கும் ஏன் கொடுக்க மறுக்கிறீர்கள். அவர் ஒரு ஹீரோ. ஆனால், அந்த குழந்தை அதன் தாயை இழந்திருக்கிறது. அந்தக் குழந்தையும் உயிருக்குப் போராடி வருகிறது. ஆனால், அதுகுறித்து யாருக்கும் எந்த அக்கறையும் இல்லை" தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி விசனம் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அல்லு அர்ஜுன் ஜாமீனை எதிர்த்து தெலங்கானா காவல்துறை உச்சநீதிமன்றத்தை நாட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இன்னொருபுறம், அந்த 9 வயது சிறுவன் ஸ்ரீதஜ் மூளைச் சாவு அடைந்துவிட்டதாக தகவல் வெளியாகியிருக்கிறது. குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீதஜிற்கு செயற்கை சுவாசம் கொடுக்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

புஷ்பா2 படத்தின் முதல் காட்சியைப் பார்க்கச் சென்ற பெண்ணுக்கு நேர்ந்த கதி, இனி யாருக்கும் நிகழக்கூடாது. அரசுகள் இதுமாதிரியான விடயங்களில் முன்னெச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பலரின் கோரிக்கையாக இருக்கிறது. அதே சமயம், சினிமா இரசிகர்களோ, 'இதற்காகவெல்லாம் அதிகாலை காட்சியை இரத்து செய்யக்கூடாது' என கருத்து தெரிவித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# அதானி, அம்பானி சொத்து மதிப்பு வீழ்ச்சி



தொழில் அதிபர்கள் முகேஷ் அம்பானி, கவுதம் அதானி ஆகியோரின் சொத்து மதிப்பு 100 பில்லியன் டொலருக்கும் கீழே குறைந்துள்ளதாக ப்ளூம்பெர்க் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ப்ளூம்பெர்க் வெளியிட்டு இருந்த, 100 பில்லியன் டொலர்கள் சொத்து மதிப்பு கொண்ட கோடீஸ்வரர்கள் பட்டியலில் இருந்து முகேஷ் அம்பானி, கவுதம் அதானி வெளியேறி உள்ளனர். தொழில் அதிபர் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 5 மாதங்களில் 120.8 பில்லியன் டொலரில் இருந்து 96.7 பில்லியன் டொலராக சரிந்துள்ளது. இதற்கு, ரிலையன்ஸ் நிறுவனத்தின் விற்பனை சரிவு காரணம். அதேபோல் கடனும் அதிகரித்துள்ளதால் பங்கு மதிப்பு சரிந்துள்ளது. ரிலையன்ஸ் நிறுவனத்தின் பங்குகள் 3.80 சதவீதம் சரிந்துள்ளது. தொழில் அதிபர் கவுதம் அதானி சொத்து மதிப்பு 6 மாதங்களில் 122.3 பில்லியன் டொலரில் இருந்து 82.1 பில்லியன் டொலராக குறைந்துள்ளது. ஹிண்டன்பெர்க் நிறுவனம் கூறிய குற்றச்சாட்டும், அமெரிக்கா நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கும் பங்குகள் சரிவுக்கு காரணமாக கருதப்படுகிறது. அதானி கிரீன் எனர்ஜி, அதானி எண்டர்பிரைசஸ் உள்ளிட்ட முக்கிய பங்குகள் 14 சதவீதம் வரை சரிவை கண்டுள்ளன.

# கோவையில் டெங்குக்காய்ச்சல்



கோவை மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் டெங்கு காய்ச்சல் பாதிப்புக்கு உள்ளான நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது எனவும் நோய் பரவலை கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆண்டுதோறும் பருவமழை காலங்களில் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகம் காணப்படும். இதை கட்டுப்படுத்த மாவட்ட சுகாதாரத்துறை, மாநகராட்சி நிர்வாகம் சார்பில், தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் சமீப நாட்களாக கோவை மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் டெங்கு காய்ச்சல் பாதிப்புக்காக சிகிச்சை பெறும் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிகோபார் குழந்தைகள் மருத்துவர் சங்கத் தலைவர் ராஜேந்திரன், பருவ மழை காலங்களில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து காணப்படும். வீடு, திறந்தவெளி பகுதிகள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல இடங்களில் நீண்ட நாட்கள் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை சுத்தம் செய்ய வேண்டும். தேங்கி நிற்கும் தண்ணீரில் தான் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் 'ஈடீஸ்' வகை நுளம்புகள் அதிக எண்ணிக்கையில் உற்பத்தியாகும்.

குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைத்து வயதினரையும் டெங்கு காய்ச்சல் பாதிக்க வாய்ப்பு உள்ளது. 'ஈடீஸ்' நுளம்புகள் தோற்றத்தில் வித்தியாசமாக இருக்கும். பகல் நேரங்களில் குறிப்பாக காலை மற்றும் மாலை நேரங்களில் தான் இந்த நுளம்புகள் மனிதர்களை கடிக்கும். எனவே வீடுகளில் ஜன்னல், கதவுகளை மாலை நேரங்களில் மூடி வைக்க வேண்டும். குழந்தைகளுக்கு கை மற்றும் கால்களை முழுவதும் மூடும் வகையிலான உடைகளை அணிவிக்க வேண்டும் என தெரிவித்தார்.

சமீப நாட்களாக கோவை மாவட்டத்தில் செயல்படும் மருத்துவமனைகளில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் வருகை அதிகரிக்க தொடங்கியுள்ளதால் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மாவட்ட சுகாதாரத்துறை, மாநகராட்சி நிர்வாகம் தீவிரப்படுத்த வேண்டும். இந்நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு மிக அவசியம். ஒவ்வொருவரும் தங்களின் வீடுகளின் பின்புறம் உள்ளிட்ட வீட்டின் சுற்றுப்புற பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற வேண்டும். காய்ச்சல் தொடரும் பட்சத்தில் மருத்துவரின் பரிந்துரையின்பேரில் இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு டெங்கு காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்படும். இத்தகைய நடவடிக்கைகளால் உரிய நேரத்தில் தேவைப்படும் குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை விரைவாக வழங்க வாய்ப்பு கிடைக்கும்.

# பேராசிரியர் வெங்கடாசலபதிக்கு சாகித்ய அகடமி விருது




"திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908" என்ற ஆய்வு நூலை எழுதிய தமிழ் பேராசிரியர் வெங்கடாசலபதிக்கு சாகித்ய அகடமி விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.

மத்திய அரசின் சார்பில், இந்தியாவின், 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த படைப்புகளுக்கு, சாகித்ய அகடமி விருதுகளை வழங்கப்படுகிறது. விருதாளர்களுக்கு 1 இலட்சம் இந்திய ரூபாய் பணப்பரிசு, செப்பு பட்டயம், பொன்னாடை ஆகியவை, டில்லியில் நடக்க உள்ள விழாவில் வழங்கப்படும். அந்த வகையில், 2024ம் ஆண்டுக்கான விருதாளர்களின் பட்டியல் நேற்று வெளியானது. ' திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும்- 1908' என்ற ஆய்வு நூலை எழுதிய தமிழ் பேராசிரியர் ஏ.ஆர். வெங்கடாசலபதிக்கு சாகித்ய அகடமி விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.

1908 மார்ச் 13ல் வ.உ.சி., கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஆங்கிலேய அரசு, அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 4 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். மக்கள் மீது வரி விதிக்கப்பட்டது. அதற்கு முன்போ பின்போ சுதந்திர போராட்டக் காலத் தமிழகத்தில் இப்படியோர் எழுச்சி ஏற்பட்டதில்லை எனலாம். ஏராளமான சான்றுகளைக் கொண்டு இந்த எழுச்சியின் போக்கை விவரிக்கும் இந்நூல் இதன் பின்னணியையும் விளைவுகளையும் விரிவாக ஆராய்கிறது. வ.உ.சி. இதைப் பற்றி எடுத்த நிலைப்பாட்டை விளக்குவதோடு எழுச்சியில் பங்களித்த எண்ணற்ற எளிய மக்களின் கதையினையும் மீட்டுருவாக்கம் செய்கிறது.

# ஆபிரிக்காவில் படகு கவிழ்ந்து விபத்து; 25 பேர் பலி




ஆபிரிக்காவில் நேற்று படகொன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரிழந்தனர்.

மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு காங்கோ. அந்நாட்டின் மைடொபி மகாணத்தில் பெமி என்ற ஆறு பாய்கிறது. இந்நிலையில் மைடொபி மாகாணம் இங்கான்கோ நகரில் இருந்து அண்டை நகருக்கு பெமி ஆற்றில் நேற்று புறப்பட்ட படகில் நூறுக்கும் மேற்பட்டோர் பயணித்தனர். ஆற்றில் சென்று கொண்டிருந்தபோது திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அளவிற்கு அதிகமான பயணிகளை ஏற்றியதால் பாரம் தாங்காமல் படகு ஆற்றில் கவிழ்ந்தது. இந்த சம்பவத்தில் 25 பேர் உயிரிழந்தனர். தகவல் அறிந்து விரைந்து வந்த மீட்பு குழுவினர் ஆற்றில் தத்தளித்தவர்களை மீட்டனர். ஆனால் மேலும் சிலரின் நிலை இதுவரை தெரியாததால் மீட்புப்பணி தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மொசாம்பிக்கில் சூறாவளி; 34 பேர் பலி; 319 பேர் காயம்



மொசாம்பிக் நாட்டின் பல பகுதிகளை சிடோ என பெயரிடப்பட்ட சூறாவளி கடுமையாக தாக்கியுள்ளது. இதனால் நியாஸ்சா, கபோ டெல்கடோ உள்ளிட்ட மூன்று மாகாணங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சூறாவளியால் மணிக்கு 260 மைல்கள் வேகத்தில் பலத்த காற்று வீசியது. இதுவரை சூறாவளி பாதிப்புக்கு 34 பேர் பலியாகி உள்ளனர்.

319 பேர் காயமடைந்துள்ளனர். சூறாவளியால் 25 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டின் தேசிய பேரிடர் ஆபத்து மேலாண்மை மற்றும் குறைப்புக்கான தலைவர் லூயிசா மெக் தெரிவித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை கபோ டெல்கடோ மாகாணத்தில் உள்ள மெகுபி மாவட்டத்தில் சூறாவளி கரையை கடந்தது. தொடர்ந்து திங்கட்கிழமை சூறாவளி தாக்கம் இருந்தது.

கனமழை மற்றும் பலத்த காற்று வீசியதில் வீடுகள், கட்டிடங்கள் சேதமடைந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன.

மின்கம்பங்களும் சரிந்தன. சூறாவளியால் இதுவரை 175,000 மக்கள் 23,600 வீடுகள் மற்றும் 170 மீன்பிடி படகுகள் சேதமடைந்துள்ளன. சூறாவளி ஜிம்பாபே அருகே செவ்வாய்க்கிழமை மாலை வலுவிழக்கும் என தெரிவிக்கப்பட்டது. சூறாவளியால் ஜிம்பாபே நாடும் பாதிக்கப்பட கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அந்நாடு தீவிரப்படுத்தியுள்ளது.




# இலவச புற்றுநோய் தடுப்பூசி; ரஷ்யா கண்டுபிடிப்பு

ரஷ்ய நோயாளிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கியுள்ளதாக ரஷ்ய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மெஸ்கோவின் சுகாதார அமைச்சின் கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் பொது பணிப்பாளரான அண்ட்ரே கப்ரின் (Andrey Kaprin) அண்மையில் ரஷ்ய வானொலியில் இந்த தகவலை வெளியிட்டதாக அந்நாட்டு அரசுக்குச் சொந்தமான செய்தி நிறுவனம் TASS தெரிவித்துள்ளது.

இந்த தடுப்பூசியானது அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து புற்றுநோயைத் தடுப்பதற்காக பொது மக்களுக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக, புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும். மேற்கத்தைய நாடுகளில் உருவாக்கப்படும் புற்றுநோய் தடுப்பூசிகளைப் போலவே, ஒவ்வொரு நோயாளிக்கும் தடுப்பூசி தனிப்பயனாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், தடுப்பூசி எந்த வகையான புற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்க பயன்படும், எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும், அது எவ்வாறு வழங்கப்படும் என்பது போன்ற விடயங்கள் இன்னும் தெளிவுபடுத்தப் பட வில்லை.



ரஷ்யாவில் புற்றுநோய் விகிதங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் 2022 இல் மாத்திரம் 635,000 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கர்ப்பப்பை, வாய்ப்புற்றுநோயைத் தடுக்க உதவும் மனித பாப்பிலோமா வைரஸ்களுக்கு (HPV) எதிரான தடுப்பூசிகள் போன்ற புற்றுநோயைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட தடுப்பூசிகள் ரஷ்ய சந்தையில் ஏற்கனவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில், புளோரிடா பல்கலைக்கழகத்தில் உள்ள நரம்பியல் விஞ்ஞானிகள் மூளை புற்றுநோய்க்கான தனிப்பயனாக்கப்பட்ட எம்ஆர்என்ஏ தடுப்பூசியை பரிசோதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வனுவாடுவில் நிலநடுக்கம்; 14 ஆக அதிகரிப்பு



பசுபிக் பெருங்கடலின் தெற்கே ஓசியானியாப் பகுதியில் அமைந்துள் வனுவாடுவில் (Vanuatu) செவ்வாயன்று (17) ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

தேடல் குழுக்கள் உயிர் பிழைத்தவர்களைக் தேடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுவதுடன், காயங்களுக்குள்ளான 200 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரே இரவில் வனுவாடுவில் ஏற்பட்ட 7.3 மெக்னிடியூட் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் கட்டிடங்கள், வீடுகள் இடிந்து வீழ்ந்தன.

நிலநடுக்கம் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து தூ தரகங்கள் உள்ளிட்ட கட்டிடங்களுக்கு சேதத்தை ஏற்படுத்தியதுடன், நாட்டின் மின்சாரம் மற்றும் தொலைபேசி சேவைகளையும் முடக்கியது. தேடுதல் மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக, ஏழு நாட்கள் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு ள்ளதாக வனுவாடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதிவான உயிரிழப்புகளில் நான்கு பேர் தலைநகர் போர்ட் விலாவில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இறந்ததாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆறு பேர் நிலச்சரிவில் இருந்தும், நான்கு பேர் இடிந்து விழுந்த கட்டிடத்தில் இருந்தும் உயிரிழந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தின் மோசமான விளைவுகளால் சுமார் 116,000 பேர் பாதிக்கப்படுள்ளதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் தெரிவித்துள்ளது. அண்டை நாடான அவுஸ்திரேலியா, தேடல் மற்றும் மீட்புப் பணிகளில் உதவ குழுக்களை அனுப்பும் என அந்நாட்டு துணைப் பிரதமர் ரிச்சர்ட் மார்லஸ் புதன்கிழமை (18) ஏபிசி செய்தியிடம் தெரிவித்துள்ளார். நேற்று அந் நாட்டு நேரப்படி 12:47 மணிக்கு (01:47 GMT) நிலநடுக்கம் ஏற்பட்டதுடன் சுனாமி எச்சரிக்கையையும் தூண்டியது.

தென் பசுபிக் பகுதியில் சுமார் 80 தீவுகளின் தாழ்வான தீவுக்கூட்டமான வனுவாடு, பிஜிக்கு மேற்கேயும், வடக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் கிழக்கேயும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் கண்ணிவெடி தாக்குதல்;

### பொலிஸார் மூவர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் போலியோ சொட்டு மருத்துவமுகாமை நடாத்திவிட்டு திரும்பிய வாகனத்தின் மீது கண்ணிவெடி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் பொலிஸார் மூவர் உயிரிழந்தனர்.

உலக அளவில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகளில் மட்டும் போலியோ நோய் பரவி வருகிறது. இந்த நோயைக் கட்டுப்படுத்த சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை போலியோ சொட்டு மருந்து முகாம்கள் மருத்துவ ஊழியர்கள்,




பாதுகாப்பிற்கு செல்லும் பொலிஸார், இராணுவ வீரர்களை குறி வைத்து பயங்கரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம் டிரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் நேற்று போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது. முகாமை முடித்துவிட்டு மருத்துவ ஊழியர்களும் அவர்களுக்கு பாதுகாப்பிற்காக சென்ற பொலிஸாரும் வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்தனர். கரக் என்ற பகுதியில் சென்றபோது அந்த வாகனத்தை குறிவைத்து கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எல்லைப்பாதுகாப்பை அதிகரித்தது கனடா

எல்லைப் பாதுகாப்பிற்காக கனேடிய அரசாங்கம் திங்கட்கிழமையன்று 1.3 பில்லியன் கனேடிய டொலர்களை ($913.05 மில்லியன்) முன்மொழிந்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவிற்குள் குடியேறுபவர்கள், போதைப் பொருட்களின் நடமாட்டத்தை கனடா குறைக்காத பட்சத்தில், வரி விதிக்கப்படும் என அச்சுறுத்தியதையடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.



முன்னதாக ட்ரம்ப், கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் 25% வரி விதிக்கப்படும் என அச்சுறுத்தல் விடுத்திருந்தார். இத்தகைய கட்டணங்கள் கனடாவின் பொருளாதாரத்திற்கு ஆதாரமாக அமையும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந் நிலையில் செவ்வாய்க்கிழமையன்று(17), இந்தத் திட்டத்தின் விவரங்களை அறிவித்த கனடாவின் நிதி மற்றும் அரசுகளுக்கிடையேயான விவகாரங்களுக்கான அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் (Dominic LeBlanc) மத்திய அரசாங்கம் எல்லைப் பாதுகாப்பு அதிகரிப்புக்கு $1.3 பில்லியன் நிதியை ஒதுக்கும் என தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் "சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஒழுங்கற்ற குடியேற்றத்திற்கு எதிராக நமது எல்லையைப் பாதுகாக்கும் என்றார்.

# பெண்ணொருவருக்கு 12 திருமணம்; 12 முறை விவாகரத்து

ஆஸ்திரியா நாட்டவரான பெண்ணொருவர் 12 முறை திருமணம் செய்து 12 முறை விவாகரத்து செய்துகொண்ட சம்பவம் ஒன்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பெண்ணுக்கு திருமணம் நடந்து அவரது கணவர் 1981ஆம் ஆண்டு உயிரிழந்துள்ளார். இதன் காரணமாக அப்பெண் கைம்பெண் ஓய்வூதியத்தினை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுவந்த நிலையில் 1982ல் மறுமணம் செய்துள்ளார். ஆனாலும் கைம்பெண் ஓய்வூதியத்தை தொடர்ந்தும் பெற்று வந்த நிலையில் இரண்டாவது திருமணம் செய்தது அரசாங்கத்துக்கு தெரியவந்ததையடுத்து குறித்த ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பெண் இதுபோன்று பணத்துக்காக தொடந்து 43ஆண்டுகளாக திருமணம் செய்வதும் பின்னர் விவாகரத்தும் பெறுவது என 12 முறை திருமணம் செய்து 12 முறை விவாகரத்து பெற்றுள்ளமை குறிப்படத்தக்கது.

# ஆஸாத் 250 மில்லியன் டொலருடன் ரஷ்யாவுக்கு தப்பிச்சென்றதாக புகார்



சிரியாவின் ஜனாதிபதியாக இருந்த பஷார் அல் ஆஸாத் 250 மில்லியன் டொலரை ரஷ்யாவிற்கு எடுத்துச் சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பஷார் அல் ஆஸாத் அரசாங்கத்திற்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு புரட்சி வெடித்தது. இதில் சுமார் 5 இலட்சம் பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், கடந்த நவம்பர் 27ஆம் திகதி சிரியா இராணுவத்துக்கு எதிராக மிகப்பெரிய போரை எச்டிஎஸ் கிளர்ச்சிப் படை ஆரம்பித்தது. அதேநேரம், ஈரானும், ரஷ்யாவும் ஆதரவு வழங்காததால் ஆஸாத் தலைமையிலான சிரியா இராணுவம் பின்னடைவை சந்தித்தது. இதனால் எச்டிஎஸ் வீரர்கள், சிரியாவின் தலைநகர் டமஸ்கஸை கடந்த 8ஆம் திகதி கைப்பற்றினர். இதனையடுத்து, ஆஸாத் ரஷ்யாவிற்குத் தப்பிச் சென்றார். இந்நிலையில், பஷார் அல் ஆஸாத் 250 மில்லியன் டொலரை ரஷ்யாவுக்கு எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொகையை கடந்த 2018 மற்றும் 2019 காலகட்டத்தில் ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. மாஸ்கோவின் நுகோவோ விமான நிலையம் சென்றடைந்த குறித்த பணம் அந்நாட்டு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டதாகவும், ஆஸாத்தின் உறவினர்கள் இதே காலத்தில் ரஷ்யாவில் இரகசியமாக சொத்துகளை வாங்கியதாவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்படத்தக்கது.

Sports விளையாட்டு
oruvansports@gmail.com

# இந்திய - அவுஸ்திரேலிய 3 ஆவது டெஸ்ட்

## மழையால் சமநிலையில் முடிவு ஆட்ட நாயகனாக டிராவிஸ் ஹெட்



இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3-ஆவது டெஸ்ட் போட்டியின் 5ஆவது நாள் மழையால் பாதிக்கப்பட்டதால் சமநிலையில் நிறுத்திக் கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸி. அணி முதல் இன்னிங்ஸில் 445க்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. நான்காவது நாள் தொடக்கத்தில் ரோஹித் ஆட்டமிழக்க கே.எல். ராகுல் - ஜடேஜா சிறப்பாக விளையாடினர். ராகுல் 84 ஓட்டங்களுக்கும் ஜடேஜா 77 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர்.

ஆட்டத்தின் பல தடவை மழை குறுக்கிட்டதால் இந்திய அணிக்கு வாய்ப்பாக அமைந்தது. இறுதியில் பும்ரா (10)- ஆகாஷ் தீப் (27) கூட்டணி அதிரடியாக விளையாடியதால் பலோ ஓன் தவிர்க்கப்பட்டது.

252/9 ஓட்டங்களுக்கு 4ஆவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் நேற்று ஆட்டம் ஆரம்பமாகி 4 ஓவர்களில் போட்டி முடிவுக்கு வந்தது.



டிராவிஸ் ஹெட்டின் பந்துவீச்சில் ஆகாஷ் தீப் 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால், இந்திய அணி 78.5 ஓவர்களில் 260 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பின்னர் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் சிறிது நேரம் தடைபட்டது.

2ஆவது இன்னிங்ஸில் 185 ஓட்டங்கள் முன்னிலையுடன் தொடங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு பும்ரா - ஆகாஷ் தீப் இருவரும் பந்துவீச்சில் நெருக்கடி கொடுத்தனர். பும்ரா - ஆகாஷ் தீப் வேகத்தில் அவுஸ்திரேலிய தொடக்க ஆட்டக்காரர்கள் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர்.



ஒரு கட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 11 ஓவர்களில் 33 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய நிலையில் 8-வது விக்கெட்டுக்கு அவுஸ்திரேலிய அணியின் கெப்டன் பாட் கம்மின்ஸ் 2 பவுண்டரி, 2 சிக்ஸர் விளாசி அணியின் ஓட்டத்தைக் கொஞ்சம் உயர்த்தினார்.

அதிகபட்சமாக கம்மின்ஸ் 22 ஓட்டங்களும், அலெக்ஸ் 20 ஓட்டங்களும், எடுத்தனர்.

இந்திய அணித் தரப்பில், பும்ரா 3 விக்கெட்டுகளும், ஆகாஷ் தீப் 2 விக்கெட்டுகளும், சிராஜ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனால், இந்திய அணிக்கு 275 ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

காலநிலை சீரின்மையால் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக விளையாடி, வெற்றி அல்லது சமநிலையில் முடித்துக் கொள்ளும் நிலையில் விளையாடினர்.

2.1 ஓவர்களில் இந்திய அணி காலநிலை சீரின்மையால் , குறைந்த வெளிச்சத்தால் முன்னதாகவே, தேநீர் இடைவேளை விடப்பட்டது. போட்டி தொடரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சமநிலையில் முடித்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. முதல் இன்னிங்ஸில் சதம் விளாசிய டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார்.

இந்தத் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் தொடர்கிறது. மேலும், இந்திய அணியும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பில் தொடர்கிறது.

இவ்விரு அணிகளும் விளையாடும் 4-வது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமாகவுள்ளது.

# ஓய்வை அறிவித்தார் அஸ்வின்




சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக இந்திய அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் ஆர்.அஸ்வின் அறிவித்துள்ளார்.

பிரிஸ்பேனில் நடைபெற்ற இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி முடிவடைந்த நிலையில் அவர் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

“சர்வதேச ரீதியில் அனைத்து வடிவங்களிலும் இந்திய கிரிக்கெட் வீரராக இது எனது கடைசி ஆண்டாக இருக்கும்” என்று பிரிஸ்பேன் டெஸ்டுக்குப் பிறகு ஒரு செய்தியாளர் சந்திப்பில் அஸ்வின் கூறினார். “ஒரு கிரிக்கெட் வீரராக எனக்குள் சில விடயங்கள் மீதம் இருப்பதாக நான் உணர்கிறேன், அதை வெளிப்படுத்த விரும்புகிறேன், அதனைக் கழக மட்ட கிரிக்கெட் போட்டிகளில் வெளிப்படுத்துவேன்.

எனது அணி வீரர்களுடன் நான் நிறைய நினைவுகளை உருவாக்கியுள்ளேன். “நிச்சயமாக நன்றி சொல்ல நிறையப் பேர் இருக்கிறார்கள்.

இந்திய கிரிக்கெட் பேரவை மற்றும் சக அணி வீரர்களுக்கு நன்றி சொல்லவில்லை என்றால் நான் என் கடமைகளில் தோல்வியடைவேன்.” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் இரண்டாவது அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராக அஸ்வின் தனது டெஸ்ட் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார்.

106 டெஸ்ட் போட்டிகளில் 24 சராசரியில் 537 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 132 டெஸ்ட் போட்டிகளில் 619 விக்கெட்டுகளை வீழ்த்திய அனில் கும்ப்ளேவுக்கு அடுத்தபடியாக அஸ்வின் இடம்பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடந்து வரும் தொடரின் முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் மட்டுமே அவர் விளையாடினார், அடிலெய்டில் நடந்த பகல்-இரவு போட்டியில் 53 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தார்.




# கிரிக்கெட் சபையால் விளையாட்டு அபிவிருத்திக்குப் பங்களிப்பு

## அமைச்சர்-ஸ்ரீலங்கா கிரிக்கெட் பேச்சுவார்த்தை



இலங்கையின் பணம் கொழிக்கும் விளையாட்டு சங்கமான ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பங்களிப்பில் நாட்டின் ஏனைய விளையாட்டுகளின் அபிவிருத்திக்கான முறையான திட்டத்தை தயாரிக்க விளையாட்டு அமைச்சு தயாராகி வருகிறது. கிரிக்கெட் நிறுவனத்தின் பங்களிப்புடன் கிரிக்கெட்டுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் பாடசாலை விளையாட்டுக்களின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ளன.

விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு கிரிக்கெட்டை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், கிரிக்கெட்டை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டுப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

கிரிக்கெட்டின் தற்போதைய நிலை குறித்துக் கலந்துரையாடிய அமைச்சர், கிரிக்கெட்டை மேலும் முன்னேற்றத் தேவையான வசதிகளை மேம்படுத்துவது குறித்தும், கிரிக்கெட் மைதானங்களை மேலும் மேம்பட்ட முறையில் மாற்றியமைப்பதில் கவனம் செலுத்தினர். இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக நெறிமுறைகள் மற்றும் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் இரு தரப்பினரும் முக்கியத்துவம் செலுத்தினர்.

இலங்கை விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு எந்தவித பாகுபாடும் இன்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். பலரது கவனத்தையும் நன்மதிப்பையும் பெற்றுள்ள கிரிக்கெட் மூலம் நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் வேலைத்திட்டத்திற்கு முழு ஆதரவை வழங்குவதாக விளையாட்டு அமைச்சர் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபை அதிகாரிகள், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# நியூசிலாந்தின் கெப்டனாக மிட்செல் சாண்ட்னர்



நியூசிலாந்தின் T20, ஒருநாள் கெப்டனாக இடது கை சுழற்பந்து வீச்சாளர் மிட்செல் சாண்ட்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜூன் மாதம் நடைபெற்ற T20 உலகக் கிண்ணத்தையடுத்து பதவி விலகிய கேன் வில்லியம்சனுக்குப் பதிலாக அதிகாரப்பூர்வ கெப்டனாக மிட்செல் சாண்ட்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

243 சர்வதேச போட்டிகளில் நியூசிலாந்து அணிக்காக விளையாடியுள்ள மிட்செல் சாண்ட்னர், T20, ஒருநாள் அணிகளுக்கு நிரந்தர கெப்டனாக இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிட்செல் சாண்ட்னர் இதற்கு முன்பு 24 T20 மற்றும் 4 ஒருநாள் போட்டிகளில் அணியை வழிநடத்தியுள்ளார்.

32 வயதான அவர் டிசம்பர் பிற்பகுதியிலும் ஜனவரி தொடக்கத்திலும் இலங்கைக்கு எதிரான T20 மற்றும் ஒருநாள் தொடரில் தனது முழுநேர கெப்டனாக செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானில் பெப்ரவரி மாதத்தில் முத்தரப்பு தொடர், அதைத் தொடர்ந்து ஐசிசி சாம்பியன்ஸ் கிண்ணம் தொடர்களில் அணியை வழிநடத்தவுள்ளார்.

சமீபத்தில் இலங்கையில் நடந்த T20 மற்றும் ஒருநாள் தொடரில் அணியை வழிநடத்திய மிட்செல் சாண்ட்னர், ஒருநாள் மற்றும் T20 கிரிக்கெட்டில் 100 போட்டிகளுக்கு மேல் நியூசிலாந்துக்காக விளையாடியுள்ள 4 பந்து வீச்சாளர்களில் ஒருவராவார்.

2020ஆம் ஆண்டு பே ஓவலில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான T20 போட்டிக்கு அவர் அணியைத் தலைமை தாங்கினார். 2022 இல் எடின்பரோவில் ஸ்காட்லாந்திற்கு எதிரான ஒரு ஒருநாள் போட்டியில் அவர் அணியை வழிநடத்தினார். மேலும், நியூசிலாந்தின் 24-வது ஒருநாள் கெப்டன் என்ற சிறப்பையும் பெற்றார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட T20 தொடர் டிசம்பர் 28ஆம் திகதி பே ஓவலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 19ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.